# தமிழ் மொழியும் இலக்கியமும்

# செயல் நூல்

## தரம் - 8

அந்த ஒளிக்கு முடிவே இல்லை
ஏனெனில் அது கல்வியாக இருக்கிறது



ஆக்கம்
தி. உதயசூரியன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் மொழியும் இலக்கியமும்

## செயல் நூல்

### தரம் - 8

ஆக்கம்
தி. உதயசூரியன்

வெளியீடு
அம்பாள் பதிப்பகம்,
பரமேஸ்வராச் சந்தி,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் விபரம்

நூல் :- தமிழ் மொழியும் இலக்கியமும்
செயல் நூல் - தரம் - 8

ஆக்கம் :- தி. உதயசூரியன்

முதற்பதிப்பு :- 2003/ஐப்பசி

நூலின் முகப்பில் தெரியும் முகம்:- செல்வன் கணேசமூர்த்தி ஆரபிகேசன்

கணனி வடிவமைப்பு :- ஞா. மணிமேகலை

அச்சுப் பதிப்பு :- அம்பாள் பிறின்டேர்ஸ்,
195/4, பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

விலை :- நூற்றி இருபத்தைந்து ரூபா

I. S. B. No. 955 - 98302 - 0 1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

கிளிநொச்சி மாவட்ட

முன்னைநாள் கல்விப் பணிப்பாளர்,

அமரர்

## பொன். சபாபதி

அவர்களுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி வலயக்கல்விப் பணிப்பாளர்,

உயர்திரு. ப. அரியரத்தினம் அவர்கள் வழங்கிய

# அணிந்துரை

பெற்றதாய், பிறந்த பொன் நாடு ஆகிய இரண்டும் உயிரினும் மேலாக மதிக்கப்படவேண்டிய போற்றப்பட வேண்டிய, பாதுகாக்கப்பட வேண்டிய சொத்துக்கள் ஆகும். அவ்வகையில் எமது தாய் மொழியாம் தமிழ்மொழியும் உயிரினும்மேலாய் போற்றப்படவேண்டிய பாதுகாக்கப்பட வேண்டியதே ஆகும். இவ்வாறு தமிழ் மொழியைப் பாதுகாக்கும் போது இலக்கியம் எனும் வகையினையும் நாம் ஆழமாகக் கற்கவேண்டியுள்ளது. எந்த ஒரு மொழியும் நீண்டகாலமாக பேணிப் பாதுகாக்கப்படுகிறது என்றால் அம்மொழியிலே பழம் பெரும் இலக்கியங்கள் உள்ளன என்பது வெள்ளிடை மலையாகும்.

தமிழ்மொழி எமது பாடசாலைகளில் பல தரங்களில் கற்பிக்கப்படுகின்ற போதிலும், உரிய இலக்கண கட்டமைப்புடனும் இலக்கிய இரசனைகளுடனும் கற்பிக்கப்படுகிறது எனக் கூறிவிட முடியாது. பிழைகள் மலிந்து வெளிவரும் மொழி நூல்கள் இன்று பல்கிப் பெருகி உள்ளன. மொழியின் அமைப்பையும் இலக்கிய ஆழங்களையும் உணராது வெறுமனே கற்பிக்கும் ஆசிரியர்களும் உள்ளனர்.

தமிழ் மொழியை அதற்கே உரிய இலக்கண வரம்புகளுடன் கற்பிக்கக்கூடிய அடிப்படைப் பயிற்சிகள் ஆசிரியர்களுக்கு உரிய இடங்களில் வழங்கப்படுவதில்லை. பழம் பெரும் இலக்கியங்கள் அவர்களுக்கு கற்பிக்கப்படுவதில்லை. இதனால் அவர்களால் இலக்கண வழுக்களை நீக்கியும், எழுத்துப் பிழைகள் இன்றியும் கற்பிக்க முடியாமல் இருப்பதைக் காண்கின்றோம். இவ்வாறான தவறுகளை விடாது கற்பிக்க வேண்டும் எனும் மனோபாவமும் இளம் சந்ததியினரே குறைந்து வருகிறது. இவற்றால் மொழியை கற்பிக்கும் விடயத்தில் மேலதிக முயற்சிகள் அவசியமாகத் தேவைப்படுகின்றன.

இந்நிலையினை தனது உயர் கல்வி அறிவாலும், கற்பித்தல் அனுபவத்தாலும் இந்நூலாசிரியர் உணர்ந்து தனது பணி, இறை பணியாகக் கருதி தரம் எட்டு மாணவருக்கென இச் செயல்நூலை ஆக்கித் தந்துள்ளார். இந்நூலாசிரியரான தி. உதயசூரியனை வன்னிப் பெருநில மண் நன்கறியும். ஆழ்ந்த இலக்கியப் புலமையும் தமிழ் மொழித் திறனும் மிக்கவர் இவர்.

நூலை ஆக்கும்போது தற்போதைய மாணவருக்கு இலகுவாக விளங்கும் முறையாக ஆக்கி உள்ளார். பயிற்சி முறையில், மொழித்திறனை முன்னெடுத்துள்ளார். மிகவும் நுண்ணிய முறையில் வினாக்களைத் தொடுத்து தர்க்கரீதியாக மாணவர்களைச் சிந்திக்க வைத்துள்ளார். அத்துடன் பிள்ளைகள் தாம் வாழுகின்ற சூழலை நன்கு அவதானிக்கவும், புதியன தேடும் நோக்கிலும் வினாக்களை தயாரித்துள்ளார்.

முழுமையாக இச் செயல் நூலை தரம் - 8 மாணவர்கள் கற்றுப் பயனடைய வேண்டும். என வலியுறுத்துகின்றேன். அதன் காரணமாக அடுத்து வரும் வகுப்புக்களில் அவர்கள் முழுநிறைவு பெற்றவர்களாகத் துலங்க முடியும்.

உதயசூரியனது விடாமுயற்சி மேலும் பலநூல்களை வெளிக்கொணரும் என நம்புகின்றேன். என்றாலும் நான் அவரைப் பாராட்டமாட்டேன். ஏனெனில் பாராட்டுக்களால் இத்தகைய சாதனைகள் தடைப்பட்டுவிடும். யாதொரு தடையுமின்றி உதயசூரியன் முன்னேசெல்ல எல்லாம்வல்ல இறையருளைப் பிரார்த்திக்கின்றேன்.

ப. அரியரத்தினம்

கிளிநொச்சி.
02-07-2003.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணப் பல்கலைகக்கழக கல்வியியற் துறைப் பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்கள் வழங்கிய,

# மதிப்புரை

கல்விக்குரிய வளமான மொழியாகவும், துல்லியமாகக் கருத்துக்களை வெளியிடக்கூடிய மொழியாகவும், வாழ்வுடன் இரண்டறக் கலந்த மொழியாகவும் தாய்மொழி விளங்குகின்றது. இக்காரணங்களால் தாய் மொழியே கல்வி மொழியாதல் வேண்டுமெனக் கல்வியியல் ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இலங்கையிலே தாய்மொழிக் கல்வி அறிமுகம் செய்யப்பட்ட பின்னர், விசைகொண்ட அறிவுப் பெருக்கம் நிகழ்ந்து வருதல் யாவரும் அறிந்ததே.

தமிழ் மொழி எங்கள் மாணவர்களுக்குரிய இயல்பான மொழியாக இருப்பினும் உரிய இலக்கணக் கட்டுக்கோப்புடனும், வழுநீங்கிய தொடர்பாடல் அமைப்புடனும் கற்றுக் கொடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. ஆரம்ப நிலைகளிலே வரன்முறையாகத் தமிழ் மொழியைக் கற்பிப்பதற்குரிய வாண்மைப் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போதுமான அளவிலே இல்லாத நிலை காணப்படுதல் பல எதிர்மறை வெளிப்பாடுகளைப் புலப்படுத்தி வருகின்றது. எழுத்துப் பிழைகள் விடுதல், அடிப்படை இலக்கணப் பிழைகள் விடுதல், உறுப்பின்றி வரிவடிவங்களை எழுதுதல் முதலிய எதிர்மறைப் பண்புகள் வெளிப்படுகின்றன.

இந்நிலையில் மொழி கற்பித்தலில் மீள் கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. கல்வி உலவியல் நோக்கில் மொழி கற்பித்தலை முன்னெடுத்தல் வேண்டும் என்ற ஆர்வமும் உந்தலும் கொண்ட இந்நூலாசிரியரான தி. உதயசூரியன் பயிற்சி முறையில் மொழித் திறன்களை முன்னெடுப்பதற்கு இச்செயல் நூலை 8ம் வகுப்பு மாணவர்களுக்கென உருவாக்கித் தந்துள்ளார்.

பல்வேறு நுட்பவியல்களைப் பயன்படுத்தி மாணவர்களுக்குப் பயன்படும் வண்ணம் நுண்ணிதான வினாக்களை எழுப்பி அகல்விரி பண்பு கொண்ட ஒரு பயிற்சி நூலை ஆக்கிய முறைமை பாராட்டுக்குரியது. அறிக்கையாட்சி, எழுச்சியாட்சி ஆகியவை மட்டுமல்ல, படைப்பாற்றல் மேம்பாட்டுக்குரிய வினாக்களையும் நூலாசிரியர் தந்துள்ளமை பாராட்டுக்குரியது.

கல்வியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

30-06-2003

பேராசிரியர் சபா. ஜெயராசா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுரை

இலங்கை அரசாங்கத்தினது தமிழ் மொழியும் இலக்கியமும் தரம் - 8 பாடநூலினை அடியொற்றியதாக இந்தச் செயல்நூல் தயாரிக்கப்பட்டுள்ளது. அது முதல் நூல் எனில் இது வழி நூல். அவ்வாறெனில் பின்னோன் வேண்டும் விகற்பங்கள் பல இந்நூலின் கண்ணுள்ளன. அவற்றினது ஏற்புடைமை குறித்தும், இந்நூல் பற்றியதுமான கல்வியாளர்களது அபிப்பிராயங்களை வரவேற்கின்றோம்.

இடது கையால் எழுதுவதற்கு சிறிது பயிற்சி கொடுக்க விரும்பியும் ஓர் ஆய்வு நோக்கங்கருதியும் ஒவ்வொருசெயலின் இரண்டாவது வினாவும் முதலாவது செயலின் பத்தாவது வினாவும் இடது கையினைப் பயன்படுத்தும் விதமாக அமைக்கப்பட்டுள்ளன. எனினும் கைகளை மாறிப் பயன்படுத்த முடியாத மாணவர்கள் அவ்வினாக்களுக்கும் வழமை போலவே விடையளிக்குமாறு அறிவுறுத்துகின்றோம்.

நூலாக்க முயற்சிகளின் பொருட்டு எப்பொழுதும் எம்மை ஊக்குவித்துக் கொண்டிருக்கும் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் திரு. ப. அரியரத்தினம் அவர்களது உரை இந்த நூலை அணிசெய்கின்றது.

மதிப்புக்குரிய பேராசிரியர் சபா ஜெயராசா அவர்கள் மதிப்புரை வழங்கியுள்ளார்கள். அன்பிற்கினிய ஆசிரிர் வே. கெ. தனபாலன் (அப்பு மாஸ்ரர்) அவர்கள் நூலாக்கத்தின்போது என்னுடனிருந்து பலவழிகளிலும் உதவினார்.

மதிப்புக்குரிய மயிலங்காடலூர் பி. நடராசன் அவர்கள் நூல் முழுவதையும் அவதானமாக வாசித்து புறுப் திருத்தி உதவினார்கள்.

கவிஞர் அகளங்கன், கலாநிதி சொக்கன் ஐயா, பேராசான் ஆ. சபாரத்தினம் ஆகியோர் எனது ஐயப்பாடுகளைத் தெளிவித்தனர்.

நூலை கணனியில் வடிவமைத்தவர் எங்கள் குலக்கொழுந்து செல்வி. ஞா. மணிமேகலை,

என்னுயிர்த்தோழன் கலாவித்தகர் S. V. தயாநிதி தானே முன்னின்று பாடுபட்டு இந்நூலை அச்சேற்றினார்.

**இவர்கள் அனைவருக்கும் எனது இதயங்கலந்த நன்றிகள் உரித்தாகுக.**

ஊரெழு,
வலிகாமம் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

E.mail-uthaya-1@hotmail.com
05 - 07 - 2003

அன்புள்ள,
தி. உதயசூரியன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


| பொருள் விபரம் | பக்கம் |
|---|---|
| பொறுமையைப் பேணுவோம் | 01 |
| வாழையடி வாழை | 06 |
| கல்வியின் பெரும் பயன் | 10 |
| இயேசுநாதர் | 13 |
| பாரதியின் இலட்சியப் பெண் | 16 |
| மின்மினிப் பூச்சிகள் மறைந்த கதை | 20 |
| வானம்பாடி | 24 |
| திறந்தநூற் பரீட்சை I | 28 |
| நீதி வழுவாமை | 30 |
| நிறையுணவு | 33 |
| மார்ட்டின் விக்கிரமசிங்க | 36 |
| பல்சுவைப் பாடல்கள் | 40 |
| ஆணி வேர் | 45 |
| காட்டு மல்லிகை | 49 |
| நீதிச் செய்யுள்கள் | 53 |
| குதிரை பிடிக்கத் தூண்டில் போட்ட கதை | 57 |
| திறந்தநூற் பரீட்சை II | 61 |
| விடுதலை | 63 |
| முருகையனின் இரு கவிதைகள் | 66 |
| மாறியது நெஞ்சம் | 69 |
| மலர்மாலை | 73 |
| நளவெண்பா | 77 |
| இணையம் | 81 |
| கவிஞனின் இதயகீதம் | 86 |
| திறந்தநூற் பரீட்சை III | 90 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொறுமையைப் பேணுவோம்

***இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன.***
***எல்லா வினாக்களுக்கும் இத் தாளிலேயே விடை தருக***

**01. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

"சிந்தா தேவி செழுங்கலை நியமத்து
நந்தா விளக்கே நாமிசைப் பாவாய்,
வானோர் தலைவி, மண்ணோர் முதல்வி
ஏனோர் உற்ற இடர்களை வாயே"

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**02 புள்ளிகள்**

**02. மேல்வரும் பாடற் பகுதியைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடதுகைப் பழக்கமுள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"யாரொ டும்பகை கொள்ளல னென்றபின்
போரொடுங்கும் புகழொடுங் காது"

..........................................................................................

..........................................................................................

**05 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. "சிறுவர்கள் தத்தமது அறிவுக்கு எட்டிய அளவுக்கு வெவ்வேறு விடையை அளித்தனர்" என்ற வாக்கியத்தில் வந்துள்ள செயப்படுபொருள்,
   i. அறிவு. ii. விடை. iii. சிறுவர். iv. வெவ்வேறு.

2. உலகம் என்ற சொல்லின் ஒத்த கருத்துள்ள சொல்,
   i. புவனம். ii. தேசம். iii. கிராமம். iv. நாடு.

3. பாலர் என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்,
   i. விருத்தர். ii. வாலிபர். iii. கிழவர். iv. மாணவர்.

4. "பெரியவருடைய முகத்தில் மலர்ச்சி தென்பட்டது" என்ற வாக்கியத்தின் எழுவாய்,
   i. முகம். ii. மலர்ச்சி. iii. பெரியவர். iv. தென்பட்டது.

5. மகாராஜா என்பதன் பெண்பாற் சொல்,
   i. மகாராணி. ii. இளவரசி. iii. பேரரசி. iv. மனைவி.

1x5=5 புள்ளிகள்

04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும், பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.

1. "இந்த உலகத்தில் இழக்கக் கூடாதது எது? " என்பது வினா வாக்கியம். [ ]
2. பெரியவர் எதிர்பார்த்த சரியான விடையைச் சிறுவர்களே கூறிவிட்டார்கள். [ ]
3. "வில்லுக்கு விஜயன், மல்லுக்கு வீமன், பொறுமைக்கு நகுலன்" என்று சொல்வார்கள். [ ]
4. மகாபாரத யுத்தத்தில் தருமர் வெற்றி பெறவில்லை. [ ]
5. பூமியைப் போன்று நாமும் பொறுமையைக் கடைப்பிடித்து வாழவேண்டும். [ ]

1x5=5 புள்ளிகள்

05. பின்வரும் சொற்களை அகர வரிசையில் எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| ஊக்கம் | அரசியல் | ---------------- | ---------------- |
| எறும்பு | அப்பன் | ---------------- | ---------------- |
| அளவு | ஈசன் | ---------------- | ---------------- |
| உறுப்பு | அறிவு | ---------------- | ---------------- |
| அலகு | உணர்வு | ---------------- | ---------------- |
| அடர்த்தி | ஆர்வம் | ---------------- | ---------------- |
| எச்சரிக்கை | அகம் | ---------------- | ---------------- |
| அருள் | ஆக்கம் | ---------------- | ---------------- |
| அன்னம் | அழகு | ---------------- | ---------------- |
| இடையன் | ஆகாயம் | ---------------- | ---------------- |

10 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. தரப்பட்டுள்ள உங்களது சுய விபரப் படிவத்தைப் பூர்த்தி செய்க.**

01. முழுப்பெயர்:-..............................................................

02. அம்மாவின் பெயர்:-..............................................................

03. அப்பாவின் பெயர்:-..............................................................

04. முகவரி:- ..............................................................

..............................................................

05. பிறந்த திகதி:- ..............................................................

06. வயது:- ..............................................................

07. உடன்பிறந்தவர்கள்:- ..............................................................

08. பின்பற்றுகின்ற சமயம்:-..............................................................

09. தந்தையின் தொழில்:- ..............................................................

10. குடும்ப வைத்தியரின் பெயர்:-..............................................................

11. படிக்கும் பாடசாலை:- ..............................................................

12. படிக்கும் தரம்:- ..............................................................

13. வகுப்பாசிரியரின் பெயர்:-..............................................................

14. மிகவும் விருப்பமான பாடம்:- ..............................................................

15. மிகவும் விருப்பமான விளையாட்டு:-..............................................................

16. மிகவும் விருப்பமான உணவு:- ..............................................................

17. மிகவும் விருப்பமான பூ :- ..............................................................

18. மிகவும் விருப்பமான பழம்:- ..............................................................

19. மிகவும் விருப்பமான பறவை:- ..............................................................

20. மிகவும் விருப்பமான மிருகம்:- ..............................................................

21. மிகவும் விருப்பமான நிறம்:- ..............................................................

22. உயர்வாக மதிக்கின்ற பெரியார்:-..............................................................

23. விரும்புகின்ற தொழில்:-..............................................................

24. எதிர்கால இலட்சியம்:- ..............................................................

25. கையொப்பம்:-..............................................................

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. தொடர்புபடுத்துக.**

| | | |
|---|---|---|
| I. | அ, இ, உ | இரண்டாம் வேற்றுமை உருபு |
| II. | ஐ | இரட்டைக் கிளவி |
| III. | எ, யா, ஆ, ஓ, ஏ | சுட்டெழுத்துக்கள் |
| IV. | உம் | வினாவெழுத்துக்கள் |
| V. | சல சல | இடைச் சொல் |

1x5=5 புள்ளிகள்

**08. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. பஞ்ச பாண்டவரின் மனைவியின் பெயர் என்ன?

.............................................................................................................

2. இப்பூமியை ஆட்சி செய்யும் அளவுக்கு ஒருவரை உயர்த்த வல்லது எது?

.............................................................................................................

3. செந்தாமரை என்பதைப் பிரித்து எழுதுக.

.............................................................................................................

4. ஆசை என்ற பொருள் தரும் வேறு ஐந்து சொற்கள் எழுதுக.

.............................................................................................................

5. சொல் + களஞ்சியம் என்பதைச் சேர்த்து எழுதுக

.............................................................................................................

3X5=15 புள்ளிகள்

**09. மேல்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. பெரியார் :-.............................................................................

.............................................................................

2. அழகு :-.............................................................................

.............................................................................

3. நிலம் :-.............................................................................

.............................................................................

4. முகம் :-.............................................................................

.............................................................................

5. சாதனை :-.............................................................................

.............................................................................

6. பாடல் :-.............................................................................

.............................................................................

3x6=18 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கீழே காணப்படும் உருவத்தில் உள்ள புள்ளிகளை இலக்க ஒழுங்கின்படி இடது கையால் இணைக்கவும். இடதுகைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் இணைக்கவும்.



நன்றி: ஈழநாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழையடி வாழை

***இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.***

**01. மேல்வரும் பாடல் வரிகளைப்பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"கல்லறையில் மலர் தூவிப்பணிகிறோம் - உங்கள்
கனவுகளை எமதாக்கித் தொடர்கிறோம்".

..............................................................................................................

..............................................................................................................

02 புள்ளிகள்

**02. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடதுகைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"தாமரைப் பூவினால் மாலை கட்டி எங்கள்
தாயகப் பூமிக்குச் சாத்துங்கடி".

..............................................................................................................

..............................................................................................................

(05 புள்ளிகள்)

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. வாழையடி வாழை என்ற கவிதையை எழுதியவர்
   i. தாமரை. ii. பழனி பாரதி. iii. அறிவுமதி. iv. வைரமுத்து.
2. நிழல் + குடை என்பதைச் சேர்த்து எழுதினால் வருவது
   i. நிழல்க்குடை. ii. நிழல்குடை. iii. நிழற்குடை. iv. நிழற்க்குடை.
3. "கண்ணம்மா என் குழந்தை" இதில் வந்துள்ள வேற்றுமை
   i. 2ஆம் வேற்றுமை. ii. 4ஆம் வேற்றுமை. iii. 5ஆம் வேற்றுமை. iv. 6ஆம் வேற்றுமை.
4. வள்ளல் என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   i. பணக்காரன். ii. உலோபி. iii. ஏழை. iv. கொடையாளி.
5. செங்கோல் என்பதைப் பிரித்து எழுதினால் வருவது
   i. செம் + கோல். ii. செங் + கோல்.
   iii. செந்+ கோல். iv. செம்மை + கோல்.

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரே உள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. சொற்கள் பொருள் தரும் வகையில் ஒன்றுடன் ஒன்று இணைந்து முற்றுப் பொருள் தருமாயின் அது வாக்கியம் எனப்படும். [ ]

2. குமணன், கடையெழு வள்ளல்களில் ஒருவனாவான். [ ]

3. "கண்டாவளை அப்புவின்ரை கடையிலை இடியப்பம் மலிவு" என்பது கூற்றுவாக்கியம். [ ]

4. வாழையின் வழுவழுப்பு மேனிக்கும் அரசியலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. [ ]

5. ஏழைகள் வாழும் இல்லம் மாளிகை எனப்படும். [ ]

**1x5=5 புள்ளிகள்**

**05. மேல்வரும் உரைப்பகுதியைக் கவனமாக வாசித்துப் பொருத்தமான இடங்களில் அவற்றிற்குரிய நிறுத்தற் குறியீடுகளை இடுக.**

ஆயரே இந்த முடிவுக்கு நீர் வந்ததற்குக் காரணம் என்ன அதை இந்தச் சபையிலே சற்றே தெரிவியும் என்று கூறினான் மன்னன்

**05 புள்ளிகள்**

**06. மேல்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. அலங்காரம் :-..........................................................................................

..........................................................................................

2. விளம்பரம் :-..........................................................................................

..........................................................................................

3. குடிசை :-..........................................................................................

..........................................................................................

4. பச்சை மரம் :-..........................................................................................

..........................................................................................

5. தலை :-..........................................................................................

..........................................................................................

6. கொடை :-..........................................................................................

..........................................................................................

**3x6=18 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. தரம் -8இல் கற்கும் மாணவரொருவர் ஒப்படை ஒன்று சமர்ப்பிப்பதற்காக தரம் -5 முதல் தரம் -8 வரையான தமிழ்ப் பாட நூல்களிலே இடம்பெற்றுள்ள பாடல்களையும் அவற்றை எழுதிய புலவர்களது பெயர்களையும் தொகுத்தார். அவற்றுட் சில கீழே தரப்பட்டுள்ளன. பாடற் தலைப்புக்கள் "அ" நிரலிலும் புலவர்களின் பெயர்கள் "ஆ" நிரலிலும் தரப்பட்டுள்ளன. "அ" நிரலிலுள்ள பாடலை எழுதிய புலவரை 'ஆ' நிரலிலிருந்து தெரிவு செய்து அம்புக்குறியினால் தொடர்புபடுத்துக.

| அ | ஆ |
|---|---|
| 1. ஆசிய ஜோதி | பட்டுக்கோட்டைகல்யாணசுந்தரம் |
| 2. நல்வழி | நவாலியூர் சோமசுந்தரப்புலவர் |
| 3. முரசு | ஞ.ம. செல்வராசா |
| 4. காட்டுமல்லிகை | தேசிகவிநாயகம்பிள்ளை |
| 5. மலர்மாலை | புரட்சிக்கமால் |
| 6. ஞானசௌந்தரி | அப்துல்லாப்புலவர் |
| 7. வெண்ணிலா | முருகையன் |
| 8. நாளை வருவான் ஒரு மனிதன் | மகாகவி |
| 9. தேள்கண்டார் தேளே கண்டார் | சுவாமி விபுலானந்த அடிகள் |
| 10. அருள் விளக்கேற்றிடுவோம் | பாரதி |

**10 புள்ளிகள்**

08. மேல்வரும் கவிதையை வாசித்து, பின் அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடைதருக.

## விரதம்

அம்மா காலை
"வீடு மெழுகென்று
சொன்னா.
கூட்டிப்பெருக்கி
சாணி பிசைந்து பிசைந்து
மெழுகுகிறேன்.

இன்று வெள்ளிக்கிழமை
அம்மா விரதம்

என் பிஞ்சுக்கரம்
வலிக்க வலிக்க
பிறைபோல்
நிலம் வளித்து வளித்து
வீடு மெழுகுகிறேன்.

சுத்தமான வீட்டில்
மகாலட்சுமி குடியிருப்பாள்
என்று அம்மா சொன்னவா.
அம்மாவுக்கு இதை
ஆச்சி சொன்னதாம்.

மகாலட்சுமியை வரவேற்க
வாசலில் கோலமும்
போட விரும்பி,
விரைவாய்
மெழுகுகிறேன் வீடு.

கோலம் போடும் மாவைப்
பிறவுயிர்கள் சாப்பிட்டால்
புண்ணியம் கிடைக்குமென்று
ரீச்சர் சொன்னவா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கவேல்ஐயாவின் மாட்டடியில்
அள்ளிவந்தசாணம்
சற்றே காய்ந்திருந்ததால்
தண்ணீர் விட்டு
கசக்கிக் கசக்கி
நிலத்தோடு
தேய்த்துத் தேய்த்து
மெழுகுகிறேன்.

"அந்தோ"

முருகன் படத்திற்கு
முன்னால்
என் கண்ணெதிரே
ஓர் வண்டு
நசிபட்டுக் கிடக்கிறது.

*

சிற்றறிவுள்ள சீவன்
சீவியத்திற்காய்
சாணிக்குள் புகுந்ததோ?

கோலம் போடும்
நினைவில்
கொலைகாறி ஆனேனோ?

இது மெய்தானோ?

என் பிஞ்சுக்கரம்
வலிக்குதென்று
சொன்னேனே,
அதுவும் மெய்தானோ?

கோலம் போடும் மாவும்
விரதம் பிடிக்கும் அம்மா,
படைக்கும் உணவும்
யாருக்கு?

1. மகாலட்சுமி எங்கே குடியிருப்பாள் என்று அம்மா சொன்னவா?

..............................................................................................................

2. சிறு வண்டு எதற்காகச் சாணிக்குள் புகுந்தது என கவிஞர் கருதுகின்றார்?

..............................................................................................................

3. சிற்றறிவு என்பதைப் பிரித்து எழுதுக.

..............................................................................................................

4. எமக்குப் புண்ணியம் கிடைக்க வேண்டுமென்றால் நாம் என்ன செய்ய வேண்டும்?

..............................................................................................................

5. இக் கவிதையில் இடம்பெற்றுள்ள அடுக்குத் தொடர்களை எழுதுக.

..............................................................................................................

..............................................................................................................

3x5=15 புள்ளிகள்

**09. உமது வாழ்வில் ஏற்பட்ட உணர்வனுபவமொன்றைச் சிறு கவிதையாக எழுதுக**

15 புள்ளிகள்

**10. "என்னால் மறக்கமுடியாத சம்பவம்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.**

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வியின் பெரும் பயன்

***இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத்தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.***

**01. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

"ஒட்டிய சமயத்து உறுபொருள் வாதிகள்
பட்டி மண்டபத்துப் பாங்கறிந்து ஏறுமின் ஏறுமின்"

.............................................................................................

.............................................................................................

**02 புள்ளிகள்**

**02) மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடது கைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"எட்டினொடு இரண்டறியா என்னைப்
பட்டி மண்டபம் ஏற்றினை ஏற்றினை"

.............................................................................................

.............................................................................................

**05 புள்ளிகள்**

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. அஸ்தினாபுரத்து அரசனின் பெயர்

   i. விஜயன். ii. அரிச்சந்திரன். iii. தருமபாலன். iv. கர்ணன்.

2. கசடு என்பதன் ஒத்த கருத்துச் சொல்

   i. குற்றம். ii. சரி. iii. சுத்தம். iv. அசடு.

3. "வெள்ளைக் குதிரை வேகமாக ஓடியது" என்ற வாக்கியத்தில் எழுவாய்அடைமொழி

   i. குதிரை. ii. வேகமாக. iii. ஓடியது. iv. வெள்ளை.

4. நாற்பது என்பதைப் பிரித்து எழுதினால் வருவது

   i. நால் + பத்து. ii. நான்கு + பத்து. iii. நாலு + பத்து. iv. நாற் + பத்து.

5. கல்வி மான்களின் திறமையை மதிப்பீடு செய்தவர்

   i. ஆட்டிடையன். ii. நக்கீரர். iii. வசிட்டர். iv. பணிப்பாளர்.

**05 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை"என்றும் அவற்றிற்கு நேரே உள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.**

1. மன்னருக்கு எதிரான கருத்தை வாய்விட்டுச் சொல்லமுடியாது. [ ]
2. அத்தினாபுரத்து அரசன் கல்வி, கலை முதலான அறிவு சார்ந்த துறைகளில் அதிக ஆர்வம் இல்லாதவன். [ ]
3. ஆட்டிடையன் தவறு செய்த காரணத்தினால் அரசவைக்கு அழைத்துவரப்பட்டான். [ ]
4. முழுக்கமுழுக்க என்பது அடுக்குத் தொடர். [ ]
5. "கடைசியாகக் கவிதைபாடிய புலவருக்குப் பரிசளிக்கிறேன்" என்று மன்னன் கூறினான். [ ]

1x5=5 புள்ளிகள்

**05. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

தெளிவாக, மந்திரி, நடுவர், பிறகு, உட்கருத்து, புரிந்திருந்தால், அரசாங்க, திறமையை, கடினமான, அறிவாளிகளாள்.

1. அரசவை மண்டபத்தில் .................................. பிரதானிகளும் மற்றும் .................................. அதிகாரிகளும் வந்து குழுமினர்.
2. கூடிய விரைவில் .................................. வந்து விடுவார் .................................. போட்டியைத் தொடங்கலாம்.
3. நீர் இந்தக் கல்வி மான்களின் .................................. மதிப்பிடுவது அப்படியொன்றும் .................................. செயலன்று.
4. அடுத்ததாக இவருடைய பாடலின் .................................. எனக்கு மிகவும்.................................. விளங்கியது.
5. ஒரு மனிதன் அறிந்து கொண்டது அவனுக்கு மட்டும் .................................. போதாது. அவனைப் போன்ற .................................. மட்டும் புரிந்துகொள்ளத் தக்கதாக இருந்தாலும் போதாது.

2X5=10 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. மன்னருக்கு எதிராவ கருத்தை ஏன் வாய்விட்டுச் சொல்லமுடியாது?

..................................................................................................................................

2. கல்வி மான்கள் ஏன் உள்ளங் குமுறினர்?

..................................................................................................................................

3. அஸ்தினாபுரத்து அரசவையில் எப்பொழுதும் நிரம்பியிருப்பவர்கள் யார்?

..................................................................................................................................

4. வாக்கிய உறுப்புக்கள் யாவும் அமைந்துவர ஒரு வாக்கியம் எழுதுக.

..................................................................................................................................

5. கோதை என்ற ஒரு சொல்லுணர்த்தும் பல பொருள்களை எழுதுக.

..................................................................................................................................

3X5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. பின்வரும் சொற்களின் பொருள் விளங்க அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. உட்பொருள் :- ..............................................................................................................

2. அறிவாற்றல் :- ..............................................................................................................

3. அரசவை :- ..............................................................................................................

4. இலக்கியம் :- ..............................................................................................................

5. பரிசு :- ..............................................................................................................

6. கவனம் :- ..............................................................................................................

3x6=18 புள்ளிகள்

**08. மேல்வரும் பாடலின் பொருளை உமது உரைநடையில் எழுதுக.**

"நெஞ்சி லுரமு மின்றி
நேர்மைத் திறமுமின்றி
வஞ்சனை சொல்வாரெடி - கிளியே
வாய்ச் சொல்லில் வீரரடி"

..............................................................................................................

05 புள்ளிகள்

**09. உங்களது பாடசாலையில் நடைபெறவுள்ள முத்தமிழ் விழாவுக்கான அழைப்பிதழ் ஒன்று எழுதுக.**

15 புள்ளிகள்

**10. ஆடுமேய்த்துத் தன் சீவியத்தைப் போக்கும் ஒருவரின் சுயசரிதையை எழுதுக.**

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல் - 04



# இயேசுநாதர்

**இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 7 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 8ஆம், 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.**

**01. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"மண்ணுலகில் இன்று தேவன் இறங்கி வருகிறான் - நல்ல
மனிதர் நடுவே குழந்தை வடிவம் பெறுகிறான்
எண்ணில்லாத அதிசயங்கள் செய்து காட்டவே - ஒரு
புண்ணியரின் மடியினிலே புதல்வனா கிறான்"

02 புள்ளிகள்

**02. மேல்வரும் பாடல் வரிகளைப்பார்த்து இடது கையால் எழுதுக இடதுகைப்பழக்கமுள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"சிலுவைகளே சிலுவைகளே உங்கள் பொருளென்ன?
இதயங்களின் கூட்டற்குறி என்றால் பிழை என்ன?"

05 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக**

1. யேசுநாதர் காலத்தில் பூமியில் அதிகரித்திருந்தது
   i. துன்பம். ii. இன்பம். iii. வறுமை. iv. நன்மை.
2. குணமாலை என்பது
   i. உருவக அணி. ii. உவமைஅணி. iii. பெயர்ச்சொல். iv. வினைச்சொல்.
3. தேசு என்பதன் ஒத்தகருத்துச் சொல்
   i. அருள். ii. ஒளி. iii. இருள். iv. சிலுவை.
4. கோபம் கொள்வது
   i. பறவைகளின் குணம். ii. தாவரங்களின் குணம்.
   iii. மனிதர்களின் குணம். iv. மிருகங்களின் குணம்.
5. பாடலில் அமிர்த நீரோடை எனக் கூறப்படுவது
   i. ஆசை. ii. அன்பு. iii. தீமை. iv. ஆறு.

1x5=5 புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.**

1. இயேசு ஆட்டுத் தொழுவத்திலே அன்னை மரியாளுக்கு மகனாகப் பிறந்தார். [ ]
2. ஆயன் என்றால் தேரோட்டுபவன். [ ]
3. "அறஞ்செய்ய விரும்பு" என்பது ஏவல் வாக்கியம். [ ]
4. இயேசுகிறிஸ்து என்ற பாடலை எழுதியவர் நாமக்கல் கவிஞர். [ ]
5. இயேசு நாதர் ஓர் அரசியல்வாதி. [ ]

1X5=05 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. உலகம் | கோபதாபம் |
| 2. வாய்மை | மன்னிப்பு |
| 3. நரி, சிறுத்தை, புலி | பண்புப் பெயர் |
| 4. பகைவர் | இணைமொழி |
| 5. காடுமேடு | துன்பம் நிரம்பியது |

1X5=05 புள்ளிகள்

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. இயேசுநாதர் எத்தகைய இயல்புகளுடன் இறைவனுடைய தூதராகப் பூமிக்கு அனுப்பப்பட்டார்?

........................................................................................................

........................................................................................................

2. இயேசு நாதர் எவ்வாறு மக்களுக்கு வழிகாட்டினார்?

........................................................................................................

........................................................................................................

3. யாருக்கு வெற்றி நிச்சயம்?

........................................................................................................

........................................................................................................

4. தீமைகளை நீக்குவது எது?

........................................................................................................

........................................................................................................

5. பசுந்தரை என்பதைப் பிரித்து எழுதுக.

........................................................................................................

3X5=15 புள்ளிகள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. சிங்கம் :-.......................................................................................................................
.......................................................................................................................
2. ஞானம் :-.......................................................................................................................
.......................................................................................................................
3. குழந்தை :-.......................................................................................................................
.......................................................................................................................
4. பூமி :-.......................................................................................................................
.......................................................................................................................
5. தோழன் :-.......................................................................................................................
.......................................................................................................................
6. தியாகம் :-.......................................................................................................................
.......................................................................................................................

**3X6=18 புள்ளிகள்**

**08. வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக அமைக்கப்பட்ட நினைவுக் கல்லொன்றிலுள்ள வாசகங்கள் கீழே தரப்படுகின்றன.**




**இது போன்று உங்கள் அயலிலிருக்கும் நினைவுக் கல்லொன்றிலுள்ள வாசகங்களை எழுதுக.**

**10 புள்ளிகள்**

**09. வெளியூரில் இருக்கும் உங்கள் உறவினருக்கு ஒரு கடிதம் எழுதுக.**

**15 புள்ளிகள்**

**10. "எனது எதிர்கால இலட்சியம்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.**

**20 புள்ளிகள்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பாரதியின் இலட்சியப் பெண்

***இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.***

**01) மேல்வரும் பாடற் பகுதியைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

“நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கு மிருப்பதால்
செம்மை மாதர் திறம்புதில்லையாம்”

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**02 புள்ளிகள்**

**02) மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடது கைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

“பாயுமொளி நீ எனக்கு
பார்க்கும் விழி நான் உனக்கு”

..........................................................................................

..........................................................................................

**05 புள்ளிகள்**

**03) மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. பெண்கள் வாழ்வில் இருள் சூழ்ந்திருந்த அக்கால கட்டத்திலே ஒளிவீசும் நிலவாகத் தோன்றியவர்.
   i. பாரதி. i. அழ வள்ளியப்பா. iii. தாமரை. iv. ஔவையார்.
2. இந்தியாவை ஆங்கிலேயர் ஆட்சி செய்த காலத்தில் தமிழ்ச் சமுதாயத்தில் பெண்கள்
   i. சுதந்திரமாக வாழ்ந்தனர். ii. அடிமைகளாக நடத்தப்பட்டனர்.
   iii. உயர்கல்வி கற்றனர். iv. வீண் பொழுதுபோக்கினர்.
3. “மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொழுத்துவோம்” மடமை என்பது
   i. நல்லறிவு. ii. விளக்கு. iii. குப்பை. iv. அறியாமை.
4. “விதவை விவாகம் தடுக்கப்பட்டது” விதவை என்றால்
   i. சிறுமி. ii. திருமணமாகாத பெண்.
   iii. கணவனை இழந்த பெண். iv. அதிகாரி.
5. நாற்றிசை என்பதைப் பிரித்து எழுதினால்
   i. நான்கு + திசை. ii. நால் + திசை. iii. நாற் + றிசை. iv. நாற் + திசை.

**1x5=5 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை"என்றும் அவற்றிற்கு நேரே உள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.**

1. பாரதி தன் பாட்டுத் திறத்தாலே பெண்களுக்குப் பெருமையைத் தேடித் தந்தார். [ ]
2. "பெண்கள் படிக்கவேண்டும். அப்படிப்பின் மூலம் பாரெல்லாம் மாட்சி பெறச் செய்யவேண்டும்" என்பது பாரதியின் கருத்து. [ ]
3. பாரதியின் பாடல்கள் படிப்போருக்கு உணர்வூட்டுவதில்லை. [ ]
4. பாரதி புதுமைப்பெண்ணை ஓர் உதய கன்னியாகவே காணுகின்றார். [ ]
5. தற்காலத்தில் பெண்களின் நிலை முன்னரை விட முன்னேற்றகரமாகவுள்ளது. [ ]

**1X5=05 புள்ளிகள்**

**05. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொற்களைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

தணியும், உறுதிகொண்ட, ஆர்ப்பரிப்பு, நன்கு, அல்லர், புதுமைப்பெண், வீரசுதந்திரம், இழிவு, பேச்சுச்சுதந்திரம், இறைவனுடைய

1. "என்று ............................ இந்த சுதந்திர தாகம்" என்று பாடிய பாரதி ............................வேண்டிப் பாடினார்.
2. பெண்கள் ............................ செய்யப்படக் கூடியவர்கள் ............................ என்பது வற்புறுத்தப்பட்டது.
3. பாரதியின் ............................ நியாயமானது. ஏனெனில் ............................ படைப்பிலே ஆண்களைப் போன்றே பெண்களும் அறிவு படைத்தவர்கள் என்பது உண்மையன்றோ.
4. பாரதியின் பார்வையிலே தோற்றம் பெற்ற ............................ ஒளி படைத்த கண்களை உடையவள், ............................ நெஞ்சினள்.
5. இன்று பெண்கள் தங்களுடைய ............................ எழுத்துச் சுதந்திரம் முதலியவற்றை ............................ வளர்த்துள்ளனர்

**10 புள்ளிகள்**

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. எவ்வெவற்றையெல்லாம் பாரதியார் வேதனையுடன் நோக்கினார்?

............................................................................................................

2. பாரதியார் பாடல்களைப் பாடியதன் நோக்கம் என்ன?

............................................................................................................

3. பாரதியின் ஆர்ப்பரிப்பு எவ்வகையில் நியாயமானது?

............................................................................................................

4. பாரதியின் இலட்சியப் பெண் எந்தெந்த வழிகளில் தன் தாய் நாட்டிற்காக உழைப்பாள்?

............................................................................................................

5. மாதரறங்கள் என்று கவிஞர் எவற்றைக் குறிப்பிடுகின்றார்?

............................................................................................................

**3X5=15 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**07. மேல்வருஞ் சொற்களின் பொருள் விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. வீரசுதந்திரம் :-..............................................................................
2. சரிநிகர் :-..............................................................................
3. விந்தை :-..............................................................................
4. பாதுகாப்பு :-..............................................................................
5. நுட்பங்கள் :-..............................................................................
6. சீருடை :-..............................................................................

**3X6=18 புள்ளிகள்**

**08. செம்மணி வீதி, நாயன்மார்க்கட்டு என்னும் முகவரியில் வசிக்கும் செ. பார்வதி என்பவர் வவுனியாவில் தங்கியிருந்து படிக்கும் தன்னுடைய பேர்த்தி செ. வத்சலா என்பவருக்கு 1000/= ரூபா பணம் அனுப்புவதற்காக தபாற் கந்தோரில் சென்று காசுக் கட்டளை விண்ணப்பமொன்றை வாங்கினார். அந்த விண்ணப்பம் கீழே தரப்பட்டுள்ளது. இதனைப் பார்வதிக்காகப் பூரணப்படுத்துக.**

P.O.C. 1
(M 3* S.T.&E.) 11/83

මෙරට සාමාන්‍ය මුදල් ඇණවුම් ඉල්ලුම් පත්‍රය
உள்நாட்டுச் சாதாரண காசுக்கட்டளை விண்ணப்பம்
APPLICATION FOR INLAND ORDINARY MONEY ORDER

| | | |
|---|---|---|
| මුදල / தொகை / AMOUNT | රු. / ரூ. / Rs. ............ ශ. / ச. / c. ............ | අංකය / இல. / No. ........ |

රුපියල් (අකුරෙන්) / ரூபா. (சொல்லில்) / Rupees (in Words) ........................................

මුදල් ගෙවිය යුතු කාර්යාලය / பணம் கொடுபட வேண்டிய இடம் / Payable at ........................................

ලබන්නාගේ නම (මුලකුරු සමග) / பெறுபவரின் பெயர் (முதல் எழுத்துகளுடன்) / Name of Receipient (with initials) ........................................

යවන්නාගේ නම (මුලකුරු සමග) / அனுப்புபவரின் பெயர் (முதல் எழுத்துகளுடன்) / Name of Remitter (with initials) ........................................

යවන්නාගේ ලිපිනය / அனுப்புபவரின் முகவரி / Address of Remitter ........................................

දිනය / திகதி / Date ..................

අත්සන/கையொப்பம்/Signature

**10 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. உங்களுடைய படிப்புச் செலவுக்கென உங்கள் உறவினர் ஒருவர் அனுப்பிவைத்த 1000/= ரூபா பணம் உங்கள் கைவசம் கிடைத்துள்ளது. எனக்கருதிக்கொண்டு, பணம் அனுப்பிய உறவினருக்கு நன்றி தெரிவித்து ஓர் கடிதம் எழுதுக.

15 புள்ளிகள்

10. கீழே தரப்பட்டுள்ள கருத்துப்படத்தை அவதானித்து பின் உமது மனதில் எழும் எண்ணங்களைப் பத்து வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு




15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மின்மினிப் பூச்சிகள் மறைந்த கதை

***இவ் வினாத் தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.***

**01. மேல்வரும் உரைப்பகுதியைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

"இலங்கையில் மட்டும் வாழும் எந்த உயிரினத்தையும் நாங்கள் அழிக்கலாகாது. அவற்றை அழித்தால் அவை பூமியில் இருந்தே மறைந்து விடும். மற்ற உயிரினங்களைக் கூட நாம் அழிக்கலாகாது. எல்லா உயிரினங்களும் ஒன்றிலொன்று தங்கியுள்ளன. இயற்கை அவற்றிற்கிடையே ஒரு சமநிலையை ஏற்படுத்தியுள்ளது".

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

**05 புள்ளிகள்**

**02. மேல்வரும் உரைப்பகுதியைப் பார்த்து இடதுகையால் எழுதுக. இடதுகைப் பழக்கமுள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"இயற்கையை நீ அழித்தால்
இயற்கையால் நீ அழிவாய்"

..........................................................................

..........................................................................

**05 புள்ளிகள்**

**03. பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. உலகில் மழை வீழ்ச்சி குறைவடைந்தமைக்கான காரணம்.
   i. காடுகளழிக்கப்பட்டமை. ii. மின்மினிப்பூச்சிகள் மறைந்தமை.
   iii. சனத்தொகை அதிகரித்தமை. iv. வனவிலங்குகள் இறந்தமை.
2. 1900 இல் இலங்கையின் மொத்த நிலப்பரப்பிற் காடாகவிருந்த பகுதி.
   i. 60 சதவீதம். ii. 30 சதவீதம். iii. 40 சதவீதம். iv. 70 சதவீதம்.
3. மனிதன் விவசாய வாழ்க்கையை ஆரம்பித்தது.
   i. பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன். ii. இருபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்.
   iii. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன். iv. நூறு ஆண்டுகளுக்கு முன்.
4. இலங்கையில் முதன்முதலாகக் குடிசன மதிப்பீடு எடுக்கப்பட்ட ஆண்டு
   i. 1902. ii. 1402. iii. 1802. iv. 2002.
5. இலங்கையில் தேசிய சூழற்பாதுகாப்புச் சட்டம் இயற்றிய ஆண்டு
   i. 1890. ii. 1980. iii. 2000. iv. 1965.

**1x5=5 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. நத்தைகளைக் கொன்று தன் சபதத்தை நிறைவேற்றியவர் அம்மா. [ ]
2. சின்னத்தம்பி வளர்ந்து பெரியவனான போது மின்மினிப் பூச்சிகளின் தொகையும் அதிகரித்திருந்தது. [ ]
3. தார்த்தெரு, மின்சாரம் போன்றவற்றை மக்களுக்கு வழங்கியவர்கள் மாநகர சபையினர். [ ]
4. சனத்தொகைப் பெருக்கமும் அபிவிருத்தியும் பூமிக்கு எவ்வித பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. [ ]
5. இயற்கைக் காடு பூமி உயிரினத்துக்களித்த ஒரு சூழல் தொகுதியாகும். [ ]

**1x5=5 புள்ளிகள்**

**05. தொடர்புபடுத்துக.**

| ஆண்டு | உலகின் சனத்தொகை |
|---|---|
| (1). கி.பி 1850 | இரண்டு பில்லியன் |
| (2). கி.பி 1930 | ஐந்து பில்லியன் |
| (3). கி.பி 1945 | ஆறு பில்லியன் |
| (4). கி.பி 1985 | நாலு பில்லியன் |
| (5). கி.பி 1999 | ஒரு பில்லியன் |

**05 புள்ளிகள்**

**06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. சனத்தொகைப் பெருக்கம் காரணமாகப் பூமிக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கள் எவை?

.............................................................................................................

.............................................................................................................

2. இரசாயன உரங்களையும் பூச்சி கொல்லிகளையும் தாராளமாக உபயோகிப்பதால் ஏற்படும் விளைவுகள் எவை?

.............................................................................................................

.............................................................................................................

3. சூழல் பாதுகாப்புப் பற்றிய உணர்வு ஏன் அவசியமானது?

.............................................................................................................

.............................................................................................................

4. சர்வதேசச் சூழல் பாதுகாப்புத் தினம் எப்போது கொண்டாடப்படுகிறது?

.............................................................................................................

5. எண்ணாயிரம் என்பதைப் பிரித்து எழுதுக.

.............................................................................................................

**3X5=15 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் தனிவாக்கியங்களைக் கூட்டுவாக்கியங்களாக எழுதுக.**

i. இலங்கையில் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆவார்.
"மௌனக் கடல்" என்ற நாவலை எழுதியவர் திரு. ரணசிங்க பிரேமதாச அவர்கள் ஆவார்.

..............................................................................................................

..............................................................................................................

ii. இலங்கையில் முதன்முதலில் வெளிவந்த புனை கதை இலக்கியம் "அசன் பேயின கதை" என்பதாகும்.
"அசன் பேயின் கதை" என்ற நூலை எழுதியவர் அறிஞர் சித்திலெப்பை அவர்கள் ஆவார்.

..............................................................................................................

..............................................................................................................

iii. இந்தியாவின் தற்போதைய ஜனாதிபதி அப்துல் கலாம் "அக்கினிச் சிறகுகள்" என்பது அப்துல்கலாம் அவர்கள் எழுதிய அவரது சுயசரிதை.

..............................................................................................................

..............................................................................................................

iv. மொழிபெயர்ப்புத் துறையில் வல்லவர் சு. மகேந்திரன்.
"தீநிழல்கள்" என்ற மொழிபெயர்ப்பு கவிதை நூலை வெளியிட்டவர் சு. மகேந்திரன்.

..............................................................................................................

..............................................................................................................

**10 புள்ளிகள்**

**08. மேல்வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. திருவிழா :-..............................................................................

..............................................................................

2. உயிரினம் :-..............................................................................

..............................................................................

3. சமநிலை :-..............................................................................

..............................................................................

4. சபதம் :-..............................................................................

..............................................................................

5. விண்ணப்பம் :-..............................................................................

..............................................................................

**3X5=15 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கீழே தரப்பட்டுள்ள கருத்துப்படத்தை நன்கு அவதானித்த பின் உமது மனதில் தோன்றும் எண்ணங்களைப் பத்து வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



15 புள்ளிகள்

10. மரத்திலிருந்து கிடைக்கம் சில பயன்கள் கீழே தரப்படுகின்றன. இவற்றை ஆதாரமாகக்கொண்டு "மரங்களைப் பாதுகாப்போம்" என்ற தலைப்பிற் கட்டுரை எழுதுக.

**மரத்திலிருந்து பெறும் சில பயன்கள்**

* உணவு.
* மழையைத்தரும்.
* வேகமாக வீசும் காற்றுக்குத்தடை.
* காற்றினால் மண் அள்ளிச் செல்வதைத் தடுக்கும்.
* மழையினால் மண் அரித்துச் செல்வதைத் தடுக்கும்.
* நிலத்தினுள் நீர் செல்லும் விகிதத்தைத் கூட்டும்.
* வளமான மண்ணை உண்டாக்கும்.
* நாம் இளைப்பாற நிழல் தரும்.
* காற்றைக் குளிர்வித்துத் தென்றலாக மாற்றும்.
* காபனீரொட்சைட்டை உறிஞ்சும்.
* காற்று மண்டலத்திற்கு ஒட்சிசனை வழங்கும்.
* காற்றிலுள்ள தூசியை வடிகட்டும்.
* சூழல் வெப்பத்தை உயரவிடாது தடுக்கும்.
* சூழலுக்குப் பசுமையைக் கொடுக்கும்.
* மனதுக்கு அமைதியைத் தரும்.
* நீர் நிலைகளை வற்றாமல் வைத்திருக்கும்.
* வருமானத்தை ஈட்டித் தரும்.

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வானம்பாடி

*இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.*

**01) மேல்வரும் பாடற் பகுதியைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"தமிழ் எங்கள் இளமைக்குப் பால் - இன்பத்
தமிழ் நல்ல புகழ்மிக்க புலவர்க்கு வேல்!
தமிழ் எங்கள் உயர்வுக்கு வான்! - இன்பத்
தமிழ் எங்கள் அசதிக்குச் சுடர் தந்த தேன்!"

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

**02 புள்ளிகள்**

**02) மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடது கைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"இனிமைத் தமிழ் மொழி எமது - எமக்கு
இன்பந் தரும்படி வாய்த்த நல் அமுது
கனியைப் பிழிந்திட்ட சாறு - எங்கள்
கதியில் உயர்ந்திட யாம் பெற்ற பேறு"

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

.................................................................................................................................

**05 புள்ளிகள்**

**03) மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. வானம்பாடி என்ற பாடலைப் பாடியவர்
   i. கண்ணதாசன். ii. பாரதி. iii. பாரதிதாசன். iv. வாலி.
2. "அசையா மகிழ்ச்சியடைக நீ" என்ற வாக்கியத்தின் எழுவாய்
   i. நீ. ii. மகிழ்ச்சி. iii. அடைக. iv. பறவை.
3. பாரதிதாசனின் இயற்பெயர்
   i. சுப்புரத்தினம். ii. சின்னத்தம்பி. ii. திருவரங்கன். iv. சுப்பிரமணியன்.
4. கீழ்வருவனவற்றுள் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவான ஒரு சொல்
   i. களிறு. ii. விறலி. iii. விஞ்ஞானி. iv. கலை.
5. நூறாண்டுகளுக்கு முன் இலங்கையின் மொத்த நிலப்பரப்பிற் காடாக இருந்த பகுதி
   i 60 சதவீதம். ii. 30 சதவீதம். iii. 80 சதவீதம். iv. 70 சதவீதம்.

**1x5=5 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரே உள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. "அசையா மகிழ்ச்சி அடைக நீ" என்பது வியங்கோள் வாக்கியம். [ ]
2. "நிகழ்த்தினேன்" என்பது தன்மை, ஒருமை, இறந்தகால வினைமுற்று. [ ]
3. "தமிழிசைஞன்" என்பது இயல்புப்புணர்ச்சி. [ ]
4. "தும்பி" என்பதன் ஒத்தகருத்துள்ள சொல் வண்டு. [ ]
5. "வழங்கியது" என்பது தொழிற் பெயர். [ ]

1x5=5 புள்ளிகள்

**05) தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. வேய்ங்குழல் | இணைமொழி |
| 2. இனிமை | வல்லினம் |
| 3. பேரும் புகழும் | புல்லாங்குழல் |
| 4. க், ச், ட், த், ப், ற் | உயிர்க் குறில் எழுத்துக்கள் |
| 5. அ, இ, உ, எ, ஒ. | பண்புப் பெயர் |

1x5=5 புள்ளிகள்

**06) மேல்வரும் எதுகைச் சொற்களைக்கொண்டு அவற்றின் கீழே தரப்பட்டுள்ள அட்டவணையைப் பூர்த்தி செய்க**

வசை, விரல், பருப்பு, திருப்பு, நிரல், பரல், கரும்பு, விரும்பு, திசை, துரும்பு, உரல், இருப்பு, பசை, விருப்பு, நசை, இரும்பு

| இசை | அரும்பு | குரல் | நெருப்பு |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

10 புள்ளிகள்

**07) மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வையத்து மக்கள் மகிழக் காரணமாக அமையக் கூடியது எது எனக் கவிஞர் கருதுகின்றார்?

...........................................................................................................

2. வானம் பாடி எங்கேயிருந்து பாடிக்கொண்டிருக்கும்?

...........................................................................................................

3. கவிஞர் கேட்ட நல்லிசை வானம்பாடி குருவியினுடையதுதான் என்பதைக் கவிஞர் எவ்வாறு உறுதிசெய்கின்றார்?

...........................................................................................................

4. வானம்பாடி என்ற பாடலில் "அசையா மகிழ்ச்சி அடைக நீ உன்றன் இசை மழையால் இன்புறுவோம் யாம்" என்று யாரால் யாருக்கு கூறப்படுகின்றது?

...........................................................................................................

5. கருவிழி என்பதைப் பிரித்தெழுதுக.

...........................................................................................................

3X5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மேல்வரும் சொற்களின் பொருள் விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. மகிழ்ச்சி:-.......................................................................................

2. மெல்லிசை:-.......................................................................................

3. அபிவிருத்தி:-.......................................................................................

4. இயற்கை:-.......................................................................................

5. உதயகன்னி:-.......................................................................................

6. அக்கினி :-.......................................................................................

**3X6=18 புள்ளிகள்**

**09. மேல்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.**

வேட்டையாடும் போதும் அத்திறன் பெற்ற ஆண்கள் முக்கியமாகினர். வேட்டையில் திறமை பெற்றவர் சமூகத்தில் உயர்வுபெற்றனர். வேட்டையாடி உணவு பெற்ற மனிதரை வில்லேருழவர் என வழங்குவர். உலோகக் கண்டுபிடிப்புக் காலத்தில் வேல் முக்கியத்துவம் பெற்றது. வேலைச் சிறப்பாகக் கையாள முடிந்தவன் வேலன் எனப்பட்டான். அவன் உற்பத்தி முயற்சியில் அதிக பங்கு வகித்தமையால் தலைவன் ஆனான். வேலவன் சக்தி மிக்கவன் எனக் கருதப்பட்டான். அவன் அறிவுமிக்கவன் என நம்பினர். காலகதியில் இவன் தெய்வமாக்கப்பட்டான். உணவு தந்த வேலன் உணவு தராத போதும் செழிப்பின் சின்னமாகிவிட்டான்.

வேட்டையாட ஆடவர் சென்றபின் பெண்கள் குகைகளில் வாழ்ந்து சிறிது சிறிதாகக் கிழங்கு நடுதல், விதை நடுதல் முதலிய தன்னிச்சைச் செயல்களால் பயிர் முயற்சியில் ஈடுபட்டனர். இதனால பயிர் உற்பத்தியைக் கண்டுகொண்டவர்கள் பெண்களே. அதுமட்டுமன்றி, பயிர்த் தொழில் செய்ய அதற்கு வேண்டிய மக்களை ஈன்றவரும் அவர்களே. ஆண்கள் வேட்டைக்காக நெடுந் தூரம் பல நாட்கள் சுற்றியலைவதால் அவர்களுக்குப் பயிர்த் தொழிலிலும் குடும்ப நலனிலும் அதிக பங்கில்லை.

1. வில்லேருழவர் என வழங்கப்படுபவர் யார்?

.......................................................................................

2. எக்காலத்தில் வேல் முக்கியத்துவம் பெற்றது?

.......................................................................................

3. பயிர் உற்பத்தி எவ்வாறு கண்டுபிடிக்கப்பட்டது?

.......................................................................................

4. வேலன் என அழைக்கப்பட்டவன் யார்?

.......................................................................................

5. பயிர்த் தொழிலிலும் குடும்ப நலனிலும் ஆண்களுக்கு அதிக பங்கின்றிப் போனது எதனால்?

.......................................................................................

**3X5=15 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. கீழே தரப்பட்டுள்ள குறிப்புக்களை ஆதாரமாகக் கொண்டு பாரதிதாசன் பற்றி கட்டுரை எழுதுக.

- பாரதிதாசன் அவர்கள் 29-04-1891ல் புதுவையில் பிறந்தார்.
- புதுச்சேரியில் பெரிய வணிகராயிருந்த கனகசபை முதலியார் இவரின் தந்தையாவார். தாய் இலக்குமி அம்மாள்
- பாரதிதாசனின் இயற்பெயர் சுப்புரத்தினம்.
- இளமையிலேயே அவருடைய இசை இனிமையில் ஈடுபட்டோர், பள்ளிநாடகங்களில் அவரை முக்கிய நடிகராக்கி மகிழ்ந்தனர்.
- மொழியறிவும் இசையுணர்வும் நல்லெண்ணமும் அவருடைய உள்ளத்தில் கவிதையுருவிற் காட்சியளிக்கத் தலைப்பட்டதால் சிறு வயதிலேயே சிறுசிறு பாடல்களை எழுதித் தமது தோழர்களுக்குப் பாடிக்காட்டுவார். அதில் பெரும் இன்பத்தை அடைவார்.
- பரதிதாசன் நண்பர் ஒருவரின் திருமணவீட்டில் விருந்துக்குப் பின் பாரதியாரின் பாடலைப் பாடினார். பாரதியாரும் அவ்விருந்துக்கு வந்திருந்தார். அப்பாடலே அவரை பாரதியாருக்கு அறிமுகபடுத்தி வைத்தது.
- பாரதியாருடன் சுமார் பத்து ஆண்டுகளுக்குமேல் பழகியவர். பாரதியாரின் வாழ்க்கை நிகழ்ச்சிகளைப் பாரதிதாசனிடம் கேட்டே பலரும் அறிந்து கொண்டனர்.
- பாரதிதாசன் உயர்ந்த எண்ணமும் விரிந்த அறிவும் கொள்கைக்குப் போராடும் குணமும் கொண்டவர்.
- பாரதிதாசன் 21.04.1964இல் காலமானார்.
- அவருடைய படைப்புக்கள் தமிழ் நாடு அரசினால் 1990இல் பொதுவுடைமையாக்கப்பட்டன.

20 புள்ளிகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்தநூற் பரீட்சை I

**தரம் எட்டு தமிழ்ப் பாடநூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது வாக்கியங்கள் கீழே தரப்படுகின்றன. அவ்வாக்கியங்கள் பாடநூலில், எந்தப் பாடத்தில், எந்தப் பந்தியில் எத்தனையாம் வரியில் எத்தனையாம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன என்பதை பாடப்புத்தகத்தைக் கவனமாக வாசித்து எழுதுக.**

**உதாரணம்:-**

"பொறுமைசாலி என்றால் அவர் தருமரேதான்."

பாடம் :- 1. <u>பொறுமையைப் பேணுவோம்</u>

பந்தி :-<u>10</u> வரி :- <u>5</u> பக்கம் :- <u>3</u>

01. "பொறுத்தார் பூமியாழ்வார் பொங்கினார் காடாழ்வார்".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

02. "அழகு தருவதற்கு அது ஒன்றே போதும்".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

03. "ஆயிரம் மரங்கள் அவனியிலே இருக்கட்டும்".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

04. "வாழை இல்லாமல் பண்டிகை வருவதில்லை".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

05. "கூடிய விரைவில் நடுவர் வந்துவிடுவார்".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

06. "இடையன் முகத்திற் பிரகாசம் தோன்றியது".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

07. "அதுதான் இலக்கியத்திற்கு அழகு!".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

08. "பகைவருக்கும் அருள்சுரக்கும் பரமஞானம் ஒக்குமே".

பாடம்:-..........................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. "ஆயனாக மனிதர் தம்மை அறிவுகாட்டி மேய்த்தவன்".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

10. "பொதுவாகப் பெண்கள் அடிமைகளாகவே மதிக்கப்பட்டனர்".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

11. "என்று தணியும் இந்தச் சுதந்திரதாகம்".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

12. "தேசமோங்க உழைத்திடல் வேண்டுமாம்".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

13. "வெற்றி எப்பொழுதும் எனக்குத்தான்".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

14. "பற்றைக்குள் நத்தைகள் குவியல் குவியலாகக் கிடந்தன".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

15. "மண்புழுக்கள் மட்டுமல்ல வண்ணத்துப் பூச்சிகளும் அருகி விட்டன".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

16. "உலகில் எங்கும் காடழிக்கும் கேடு நடக்கிறது".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

17. "எங்கள் அபிவிருத்தி ஆசை எடுத்த பலிகளைப் பார்த்தீர்களா?".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

18. "சூழல் பாதுகாப்புடன் சேர்ந்த அபிவிருத்திதான் தேவை".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

19. "நீந்துகின்ற வானம்பாடிக்கு நிகழ்த்தினேன்".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................

20. "இசை மழையால் இன்புறுவோம் யாம்".

பாடம்:-...................................................................................

பந்தி:-.................... வரி:-.................... பக்கம்:-....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீதி வழுவாமை

**இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.**

**01. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"காலடித் தாமரை நோவது மறந்து
காதல னோடு நடந்தாளே - அந்தக்
காலனும் கூட நடந்ததை எண்ணிக்
கற்புக் கரசி துடித்தாளே".

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

..........................................................................................

**02 புள்ளிகள்**

**02. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடதுகைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"காலை விடிந்த தென்று குயிலே பாடு - எங்கள்
கவலை முடிந்ததென்று குயிலே பாடு"

..........................................................................................

..........................................................................................

**(05 புள்ளிகள்)**

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. பாண்டி நாட்டு வியாபாரியின் பெயர்
   i. மாறன். ii. கீரந்தை. iii. நகுலன். iv. செவ்வேள்.
2. குற்றவாளி என்பதன் எதிர்க்கருத்துச் சொல்
   i. சுத்தவாளி. ii. சுற்றவாளி. iii. நிரபராதி. iv. வழக்காளி.
3. அரண்மனையில் மகளிருக்கென அமைக்கப்படும் தனியிடம்
   i. நந்தவனம். ii. அந்தப்புரம். iii. சமையலறை. iv. விறாந்தை.
4. அரியாசனம் என்பதன் ஒத்தகருத்துள்ள சொல்
   i. சரியாசனம். ii. கதிரை. iii. சிம்மாசனம். iv. வாங்கு.
5. வானூர்தி என்பது
   i. இயல்புப்புணர்ச்சி. ii. தோன்றல் விகாரம். iii. திரிதல் விகாரம். iv. கெடுதல் விகாரம்

**1x5=5 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. பெண்களுக்கு அன்பும் பணிவும் அமைந்திருப்பது போல வல்லமையும் தன்னம்பிக்கையும் வேண்டும். [ ]
2. ஒரு மன்னனுடைய செங்கோலின் ஆற்றல் கண்ணீரால் கவிழ்ந்துவிடும். [ ]
3. இரவு நேரத்தில் வீட்டுக் கதவைத் தட்டியவன் யாரென்று குடிமக்கள் மன்னனிடம் கூறினர்?. [ ]
4. பாண்டிய மன்னன் மாறனின் ஆட்சியில் குடிமக்கள் நிம்மதியாக வாழவில்லை. [ ]
5. ஒரே நேரத்தில் எட்டு விடயங்களை அவதானிக்கும் ஆற்றல் வாய்ந்தவன் அட்டவதானி. [ ]

1x5=5 புள்ளிகள்

**05. மேல்வரும் வாக்கியங்களில் உள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

குடிமக்களுக்கு, எல்லாம், விற்றுவிட்டால், மாறனின், தெரியாமல், திரும்பி வந்த, நீதி, பொருள்கள், பயணத்திற்கு, வேறுபாடு

1. கொண்டு செல்லும் ..............................எல்லாவற்றையும் .............................. உடன் திரும்பிவிடுவேன்.
2. எனது .............................. வேண்டிய பொருட்களை.............................. ஒழுங்குபடுத்திவை.
3. மன்னன்.............................. ஆட்சியில்.............................. எவ்வித துன்பமும் ஏற்பட இடமில்லை.
4. கீரந்தை .............................. விவரம் எனக்கு .............................. போய்விட்டது.
5. எனது நாட்டில் வேந்தனுக்கொரு.............................. வேலைக்காரனுக்கொரு நீதியென்ற .............................. கிடையாது.

2x5=10 புள்ளிகள்

**06. பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. பாண்டிய நாட்டுச்சட்டம் எப்படிப்பட்டது?

..............................................................................................................................

2. குடிமக்களின் முறைப்பாட்டைக் கேட்ட மன்னன் அவர்களுக்கு என்ன பதில் கூறினான்?

..............................................................................................................................

3. மன்னன் கதவைத் தட்டியமைக்கான காரணத்தை அமைச்சருக்கு விளக்கிக்கூற விரும்பாதது ஏன்?

..............................................................................................................................

4. கீரந்தை மனைவி பார்வதியின் இயல்புகள் எவை?

..............................................................................................................................

..............................................................................................................................

5. செங்கோல் என்பதைப் பிரித்து எழுதுக?

..............................................................................................................................

(3x5=15 புள்ளிகள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **மேல்வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. திரவியம் :- ........................................

2. வெளியூர் :- ........................................

3. மன்னன் :- ........................................

4. வியாபாரம் :- ........................................

5. பாற்குடம் :- ........................................

6. தண்டனை :- ........................................

3x6=18 புள்ளிகள்

08. **தரம் எட்டில் கற்கும் மாணவர்களிடம் "நீங்கள் அறிந்த அரசர்களது பெயர்களைக் கூறுக" என ஆசிரியர் கேட்டபோது அவர்கள் சொன்ன பெயர்கள் கீழே தரப்பட்டுள்ளன. அவற்றை அகர வரிசையில் ஒழுங்குபடுத்துக.**

இராவணன், எல்லாளன், அலெக்ஸ்சாண்டார், தருமபுத்திரன், கஜபாகு, அதிகமான், குமணன், கர்ணன், சேரன், தசரதன்.

........................ ........................

........................ ........................

........................ ........................

........................ ........................

........................ ........................

10 புள்ளிகள்

09. **பாடசாலை மாணவர்களுக்கென இலவசமாகக் கணனிப் பயிற்சியை வழங்க விரும்பிய நிறுவனம் ஒன்று தனது நோக்கத்தை விளம்பரப்படுத்த விரும்பியது. அதற்கான விளம்பரத்தினை எழுதுக.**

10 புள்ளிகள்

10. **"நான் ஒரு வியாபாரியானால்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.**

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நிறையுணவு

***இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.***

**01. மேல்வரும் வாக்கியத்தைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"வாழ்க்கை கற்பனையை விட ரசனை நிரம்பியது".

..........................................................................................................................................

02 புள்ளிகள்

**02. மேல்வரும் வாக்கியத்தைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடதுகைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"மனிதநேயமே மகோன்னதமான கலை"

..........................................................................................................................................

(05 புள்ளிகள்)

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ் கீறிடுக.**

1. ஒருவருக்குத் தேவையான கலோரிப் பெறுமானத்தை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் உணவு
   i. தாவர உணவு. ii கடல் உணவு. iii. நிறையுணவு. iv. பாலுணவு.

2. தென்னையின் இளமைப் பெயர்
   i. கன்று. ii. நாற்று. iii. குட்டி. iv. பிள்ளை.

3. தேங்காய் என்பதைப் பிரித்து எழுதினால் வருவது
   i. தெங்கு + காய். ii. தேங் + காய். iii. தெங் + காய். iv. தேம் + காய்.

4. கம்பனும் வியக்கும் கவிதை என்ற வாக்கியத்தில் உம் இடைச்சொல்லுணர்த்தும் பொருள்
   i. எதிர்மறை. ii. உயர்வு சிறப்பு. iii. எச்சம். iv. எண்.

5. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா
   i. பொன்விழா. ii. வெள்ளி விழா. iii. வைரவிழா. iv. அமுதவிழா.

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் வாக்கியங்களில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு பொருத்தமான சொல்லை கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து இடைவெளிகளில் நிரப்புக.**

புத்தம்புதிய, வற்றாளை, மரவள்ளி, மிகவும், வளர்ச்சி, தசைகளும், பொருள், பெயர்ச்சொல்லுடனோ, அளவு, விற்றமின்கள்.

1. உடல் ................................ என்பது எலும்புகளும் ........................................ வளர்வதுதான்.
2. பழுப்பாகு செய்து சாப்பிடுவதைவிட................................................................ பழங்களைச் சாப்பிடுவதுதான் ........................................ சிறந்தது.
3. போதிய.................................... இலை வகைகளையும் பழங்களையும் உண்டு வந்தால் நமக்குத் தேவையான ............................................ கிடைத்துவிடும்.
4. உருளைக் கிழங்கு ....................................... இராசவள்ளி ................................ என்பவற்றிலும் அரிசி, கோதுமை என்பவற்றிலும் காபோவைதரேற்று உண்டு.
5. இடைச்சொல்லானது ................................................ அல்லது வினைச் சொல்லுடனோ சேர்ந்தே.................................... தரும்.

**10 புள்ளிகள்**

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| i. தத்தமது பொருளுணர்த்தி வரும் | ஆதிபகவன் முதற்றே உலகு |
| ii. வேற்றுமை உருபுகள் | மன்னவனும் நீயோ |
| iii. தேற்றம் | எல்லோரும் நல்லவர்கள் |
| iv வினா | ஐ, ஆல், கு, இன், அது, கண் |
| v முற்று | ஏ, ஓ, உம் |

**1x5=5 புள்ளிகள்**

**06. பின்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. அம்மாமார்கள் பிள்ளைகளின் சாப்பாடு பற்றியே சதா எண்ணிக்கொண்டிருப்பார்கள். [ ]
2. உடல்வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச் சத்து ஐந்து வகைப்படும். [ ]
3. பொறுமை, தியாகம் என்பவற்றை மாணவர்கள் கவனத்திற் கொள்ள வேண்டும். [ ]
4. உடற் பயிற்சி செய்வதில் மாணவர்கள் கவனம் வெலுத்தத் தேவையில்லை. [ ]
5. பனையின் இளமைப் பெயர் வடலி. [ ]

**3X5=15 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. உணவுப் பட்டியல் தயாரிக்கப்படும் பொழுது கவனத்திற் கொள்ளப்படுபவை எவை?
..........................................................................................................................
2. உடல் வளர்ச்சிக்கும் ஆரோக்கியத்திற்கும் இன்றியமையாதவை எவை?
..........................................................................................................................
3. ஐம்பொறிகளும் எவையென எழுதுக.
..........................................................................................................................
4. "ஆழநெடுந்திரை ஆறுகடந்திவர் போவாரோ" என்பதில் ஓகார இடைச்சொல் உணர்த்தும் பொருள் என்ன?
..........................................................................................................................
5. நூற்றைம்பது என்பதனைப் பிரித்து எழுதுக?
..........................................................................................................................

3x5=5 புள்ளிகள்

**08. மேல்வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. இலக்கணம்:- ..........................................................................................
..........................................................................................
2. மருந்து :- ..........................................................................................
..........................................................................................
3. சத்துணவு :- ..........................................................................................
..........................................................................................
4. தியாகம்:- ..........................................................................................
..........................................................................................
5. அட்டவணை:- ..........................................................................................
..........................................................................................
6. பொறுப்பாளர்:- ..........................................................................................
..........................................................................................

3x6=18 புள்ளிகள்

**09. ஒரு வாரத்தில் ஒருவர் உட்கொள்ள வேண்டிய நிறையுணவு வகைகளைக் கொண்டதாக அட்டவணை ஒன்று தயாரித்து எழுதுக.**

15 புள்ளிகள்

**10. "நான்விரும்பும் பெரியார்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.**

20 புள்ளிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்ட்டின் விக்கிரமசிங்க

***இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.***

**01. மேல்வரும் பாடற் பகுதியைப் பார்த்து உருப்பமைய எழுதுக.**

"ஆண்டுக்கு ஆண்டு தேதிக்குத் தேதி
ஆயிரம் இருக்குது சுபதினம்
அடுத்தவர் நலனை நினைப்பவர் தமக்கே
ஆயுள் முழுவதும் சுபதினம்"

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

.............................................................................................................

02 புள்ளிகள்

**02. மேல்வரும் உரைப்பகுதியைப் பார்த்து இடதுகையால் எழுதுக. இடது கைப்பழக்கமுள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"1965ஆம் ஆண்டு கம்பெரலிய படத்திற்கு **'ஸ்வர்ணமயூர'** விருது கிடைத்தது. அப்படம் சர்வதேசத்திரைப்பட விழாவிலே பாராட்டும் பரிசும் பெற்றது".

.............................................................................................................

.............................................................................................................

05 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. மார்ட்டின் விக்கிரமசிங்க பிறந்த கிராமம்
   i. கொக்கல. ii. கொச்சிக்கடை. iii. நீர்கொழும்பு. iv. திக்வல்ல.
2. மார்ட்டின் விக்கிரமசிங்க எழுதிய முதலாவது நாவல்
   i. லீலா. ii. கலியுகம். iii. சோமா. iv. சீதா.
3. கம்பெரலியா நாவலைத் தமிழில் மொழிபெயர்த்தவர்
   i. பேராசிரியர் க. கைலாசபதி. ii. பேராசிரியர் எம். எம். உவைஸ்.
   iii. சுவாமி விபுலானந்த அடிகள். iv. பேராசிரியர் சு. வித்தியானந்தன்.
4. சமூகத்தில் பெற்றுக் கொண்ட அனுபவங்களை என்றும் மறக்கக்கூடாது என்பதை வற்புறுத்தும் நாவல்
   i. ஜராங்கணீ. ii. கலியுகம். iii. கம்பெரலியா. iv. சீதா.
5. ஆடுகளின் கூட்டம்
   i. மந்தை. ii. நிரை. iii. குடும்பம். iv. குழு.

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

1. 1974ம் ஆண்டு மார்ட்டின் விக்ரமசிங்க அவர்களுக்கு ஜனாதிபதி விருது வழங்கப்பட்டது. [ ]
2. பொருளாதார முன்னேற்றத்திற்குக் கல்வி முன்னேற்றம் அவசியமில்லை. [ ]
3. பியதாச சிறிசேனா, டபிள்யூ. ஏ. சில்வா ஆகியோர் மாரட்டின் விக்கிரமசிங்கவின் சமகாலத்தவர்கள் ஆவர். [ ]
4. மார்ட்டின் விக்கிரமசிங்க தத்துவம், சமயம் ஆகிய துறைகளில் அக்கறை காட்டவில்லை. [ ]
5. சீதா என்பது மார்டின் விக்கிரமசிங்க எழுதிய முதலாவது நாவலாகும். [ ]

3X5=15 புள்ளிகள்

**05. தொடர்பு படுத்துக.**

| | |
|---|---|
| 1. ஒப்புப் பொருள் | மூன்றாம் வேற்றுமை |
| 2. உடைமைப் பொருள் | ஐந்தாம் வேற்றுமை |
| 3. உடனிகழ்ச்சி | இரண்டாம் வேற்றுமை |
| 4. செயப்படுபொருள் | முதலாம் வேற்றமை |
| 5. எழுவாய்ப் பொருள் | ஆறாம் வேற்றுமை |

1x5=5 புள்ளிகள்

**06. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

மகத்தான, இலக்கிய, செயற்பாடு, வேற்றுமை, சமூகத்தில், சாடுவனவாக, தினமின, ஆசிரியராகவும், உண்மையான, ஏமாற்றுத்களும்

1. வாக்கியத்தில் பெயர்ச்சொற்களின் இலக்கணச் ........................................ வேறுபடுவது ........................................ எனப்படும்.
2. இலங்கையின் ........................................ வரலாற்றிலே மார்ட்டின் விக்கிரமசிங்கவிற்கு ........................................ ஓர் இடம் உண்டு
3. வெவ்வேறு காலங்களில் மார்ட்டின் விக்கிரமசிங்க........................................ சிலுமினட், லக்மின போன்ற சிங்களப் பத்திரிகைகளின் ........................................ கடமையாற்றினார்
4. மார்டின் விக்கிரமசிங்கவின் நூல்கள் யாவும் அக்காலச் ........................................ புரையோடிப் போயிருந்த மூடப் பழக்கவழக்கங்களைச் ........................................ அமைந்தன.
5. மார்ட்டின் விக்கிரமசிங்க மனிதரிடையே ........................................ ஏற்றத்தாழ்வுகளும் பகைமைகளும் ஒழிய வேண்டுமெனபதில் ........................................ ஆர்வம் மிக்கவராக இருந்தார்.

3X5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் வினாக்களிற்கு விடை தருக.**

1. மனிதன் எவ்வாறு முன்னேற முடியும் என மார்ட்டின் விக்கிரமசிங்க எடுத்துக் காட்டினார்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

2. மார்ட்டின் விக்கிரமசிங்க அக்கறை காட்டிய துறைகள் எவை?

.................................................................................................................................................

.................................................................................................................................................

3. மூடப்பழக்க வழக்கங்களில் நம்பிக்கை வைப்பதனால் ஏற்படும் தீங்குகள் எவை?

.................................................................................................................................................

.................................................................................................................................................

4. மாரட்டின் விக்கிரமசிங்க எவ்வகையில் தமது நாட்டிற்கும் மொழிக்கும் பெருமை தேடித்தந்தார்.

.................................................................................................................................................

.................................................................................................................................................

5. ஜனாதிபதி விருதாகத் தனக்குக் கிடைத்த பணத்தை மார்ட்டின் விக்கிரமசிங்க என்ன செய்தார்?

.................................................................................................................................................

.................................................................................................................................................

**3X5=15 புள்ளிகள்**

**08. மேல்வரும் செற்களின் பொருள் புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. விவேகம் :-.................................................................................................................

.................................................................................................................................

2. விருது :-.................................................................................................................

.................................................................................................................................

3. கலியுகம் :-.................................................................................................................

.................................................................................................................................

4. கலாநிதி :-.................................................................................................................

.................................................................................................................................

5. வரலாறு :-.................................................................................................................

.................................................................................................................................

6. ஊடகம் :-.................................................................................................................

.................................................................................................................................

**3x6=18 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. இலங்கையில் நூல்களை வெளியிடும் நிறுவனமொன்று தனது அண்மைக்கால வெளியீடுகள் பற்றி வெளியிட்ட விளம்பரமொன்று கீழே தரப்படுகிறது.

மல்லிகைப் பந்தல்
201-1/1, ஸ்ரீ பதிரேசன் வீதி,
கொழும்பு,
தொலைபேசி: 320721,

## மல்லிகைப் பந்தல் சமீபத்தில் வெளியிட்டுள்ள நூல்கள்

| | | |
|---|---|---|
| எழுதப்படாத கவிதைக்க வரையப்படாத சித்திரம் | டொமினிக் ஜீவாவின் வாழ்க்கை வரலாறு | 250/= |
| காட்டூன் ஓவியஉலகில் நான் | சிரித்திரன் சுந்தர் | 160/= |
| கிழக்கிலங்கைக் கிராமியம்(கட்டுரை) | ரமேஸ் அப்துல்லாஹ் | 100/= |
| முப்பெருந் தலைநகரங்களில் முப்பது நாட்கள் (பிரயாணக் கட்டுரை) | டொமினிக் ஜீவா | 110/= |
| மனசின் பிடிக்குள் (கைக்கூ) | பாலரஞ்சினி | 60/= |
| இப்படியும் ஒருவன் (சிறுகதை) | மா. பாலசிங்கம் | 150/= |
| நிலக்கிளி (நாவல்) | பாலமனோகரன் | 140/= |
| தரைமீன்கள் (சிறுகதை) | ச. முருகானந்தன் | 150/= |
| கூடில்லாத நத்தைகளும் ஓடில்லாத ஆமைகளும் (சிறுகதைகள்) | செங்கைஆழியான் | 175/= |
| நாம் பயணித்த புகைவண்டி(சிறுகதை) | ப.ஆப்டீன் | 150/= |

இவற்றுள் ஒரு நூலைத் தெரிவு செய்து அதனைத் தபாலில் அனுப்பிவைக்குமாறு அந்த நிறுவனத்திற்குக் கடிதமெழுதுக.

15 புள்ளிகள்

10. "நான் மிகவும் விரும்பிப் படித்த நூல்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பல்சுவைப் பாடல்கள்

**இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.**

**01. மேல்வரும் நூற்பாவினைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்
வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை"

.............................................................................................................

.............................................................................................................

**02 புள்ளிகள்**

**02. மேல்வரும் வாக்கியத்தைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடது கைப்பழக்கமுள்ளவர்கள் வலதுகையால் எழுதுக.**

"அரசியல் பிழைத்தோர்க்கு அறம் "கூற்றாகும்".

.............................................................................................................

**05 புள்ளிகள்**

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. தாயும் சேயும் என்ற பாடலை எழுதியவர்.
   i. கண்ணதாசன். ii. கோபாலகிருஷ்ணபாரதி.
   iii. மு.நல்லதம்பி. iv. படிக்காசுப்புலவர்.

2. அம்பன் கங்கையும் மகாவலிகங்கையும் சங்கமிக்கும் இடம்
   i. தம்புல்லை. ii. மூதூர். iii. மினிப்பே. iv. பேராதனை.

3. மற்றவர்களுக்குக் கொடுக்கக் கொடுக்கக் குறையாத பொருள்
   i. கல்வி. ii. செல்வம். iii. உணவு. iv. பரிசு.

4. கமகம என்பது
   i. அடுக்குமொழி. ii. இரட்டைக்கிளவி. iii. அடுக்கிடுக்குத்தொடர். iv. ஆகுபெயர்.

5. கொடைக்குப் பெயர் பெற்றவர்
   i. படிக்காசுப்புலவர். ii. வியாபாரி. iii. சீதக்காதி. iv. காளமேகம்.

**1x5=5 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக் குறியினுள் எழுதுக.

1. கல்வி ஏழு பிறப்பிற்கும் தவறாது கைகொடுத்து உதவும். [ ]

2. இரப்பவருக்கு இல்லை என்று சொல்லாது கொடுப்பவர் உலோபி. [ ]

3. தொழிலாளர்களை மேற்பார்வை செய்பவன் கங்காணி. [ ]

4. எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை. [ ]

5. படர்க்கைப் பெயர்களை முன்னிலைப்படுத்தி விளிக்கும் போது அது விளிப்பெயராகின்றது. [ ]

1x5=5 புள்ளிகள்

05. தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. கண்,இல்,இடம் | கல்வி |
| 2. இங்கிலிசுக்காரன் | தட்டுப்பாடு |
| 3. எல்லைப்பொருள் | கார் |
| 4. மனத்தெளிவு தருவது | ஏழாம் வேற்றுமை உருபுகள் |
| 5. பஞ்சகாலம் | ஐந்தாம் வேற்றுமை |

1x5=5 புள்ளிகள்

06. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

நடையும், காணலாம், மழை, ஒருநாளில், கிளி, மொழி, நெருப்பினால், நனைந்து, சீதக்காதி, ஏற்படாமல்

1. .............................................. கூட ...................................... தேனாகலாம்.

2. விளையாடும் .............................................. உந்தன் .............................................. பேசுமா?

3. கல்வியானது ..............................எரியாது, வெள்ளத்தினால் ......................................அழியாது.

4. தட்டுப்பாடு ..............................உணவளிப்பதற்குத் துணிந்து நின்றவர் ...................................

வள்ளலாவார்.

5. அட்டைக் கடியும் அரிய வழி ............................ ................................ கட்டை இடறுதலும்

.............................. கண்டியிலே.

10 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. **மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வானத்தை தொடும் அளவுக்கு மரங்கள் செழித்து வளர்வதற்கு ஆதாரமாக இருப்பது எது?

.................................................................................................................................

2. மழை இல்லாது போனால் ஏற்படும் விளைவுகள் எவை?

.................................................................................................................................

3. கல்வி எவ்வெவ் வகையில் கற்றவர்க்கு உதவுகின்றது?

.................................................................................................................................

4. ஈறுகெட்டு ஈற்றயல் நீண்டு விழிவேற்றுமை ஏற்ற இரண்டு பெயர்ச்சொற்கள் தருக.

.................................................................................................................................

5. பின்னங்கால் என்பதைதப் பிரித்து எழுதுக.

.................................................................................................................................

**3X5=15 புள்ளிகள்**

08. **மேல்வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றை தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. அம்மா :-.................................................................................................................................

.................................................................................................................................

2. சம்பவம் :-.................................................................................................................................

.................................................................................................................................

3. தோட்டம் :-.................................................................................................................................

.................................................................................................................................

4. சிந்தை :-.................................................................................................................................

.................................................................................................................................

5. கொடை :-.................................................................................................................................

.................................................................................................................................

6. இயற்கை :-.................................................................................................................................

.................................................................................................................................

**3x6=18 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கல்வி கற்பதற்கான மாணவர் விடுதி ஒன்றிலே தங்கியிருக்கும் சிறுமி ஒருவர் தனது அண்ணாவிற்கு எழுதிய கவிதை கீழே தரப்படுகின்றது.

அண்ணாவிற்கு,
கல்விக்காய் வந்துவிட்டேன்.
சுகம் சொல்ல என்ன இருக்கு
வீட்டில்
கை கால் எறிந்து படுத்தேன்.
விடுதியில்,
கை நெஞ்சில் வைத்து
கால் சுருக்கி
படுத்திருக்கின்றேன்.
நித்திரையில்லை
பரீட்சைக்குப் படிப்பதனால்
பயனுண்டோ?
சும்மாவா சுதந்திரம்.
இவ்வண்ணம்,
தங்கை.

இக் கவிதையை எழுதிய தங்கைக்குப் பதில் எழுதுக.

15 புள்ளிகள்

10. கீழே தரப்பட்டுள்ள தகவல்களை ஆதாரமாகக் கொண்டு "ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் அவர்களின் பணிகள்" என்ற தலைப்பிற் கட்டுரை எழுதுக.

20 புள்ளிகள்

* யாழ்ப்பாணத்து நல்லூரிலே செல்வாக்குள்ள குடும்பம் ஒன்றில் 1822 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தவர்.
* தந்தை கந்தப்பிள்ளை, தாய் சிவகாமியம்மை.
* இவர் திண்ணைப்பள்ளியிற் படித்த பிறகு 12 ஆம் வயதில் பார்சிவல் பாதிரியாருடைய பாடசாலையில் ஆங்கிலமும், சேனாதிராய முதலியார் சரவணமுத்துப் புலவர் முதலிய வித்துவான்களிடம் தமிழும் படித்தார்.
* பார்சிவல் பாதிரியார் இவருக்கு 19 ஆம் வயதில் இருமொழித் திறமை இருப்பதைக் கண்டு, தமது பாடசாலையில் தமிழ் ஆங்கில உபாத்தியா ராகவும், தமக்குத் தமிழ்ப் பண்டிதராகவும் அமர்த்திக் கொண்டு பைபிளைத் தூய தமிழில் மொழிபெயர்க்கச் செய்தார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* நாவலர் பைபிளை மொழிபெயர்த்து வருகிற காலத்தில் தமது சமயத்தை உணரவேண்டுமென்ற உணர்ச்சி தோன்றச் சைவ சித்தாந்த சாத்திரங்களையும் திருமுறைகளையும் சமஸ்கிருதத்தையும் கற்றுச் சைவாகமங்களிலே வேண்டிய பகுதிகளையும் தாமே கற்றுக் கொண்டார்.
* இளமை தொட்டே கோயில்களிற் புராணங்களுக்குப் பதப்பொருள் கூறி விருத்தியுரை சொல்லுதல், தருக்கித்தல் முதலிய பழக்கங்களும் இவரிடம்இருந்து வந்தன.
* சைவாநுஷ்டானங்களில் என்றுமே இவர் தவறியதில்லை.
* அக்காலத்தில் பாதிரிமார் மதமாற்றத்திற்குக் கையாண்ட முறைகளால் நாவலருக்கு வருத்தம் உண்டாயிற்று, அவருடைய வாழ்க்கையே மாறியது.
* அவர் இலவாழ்க்கையிற் புகாமல் சமய வளர்ச்சிக்கே உழைக்க வேண்டும் என உறுதிசெய்து கொண்டார்.
* 24 ஆம் வயதின் தொடக்கத்தில் மாணவர் சிலரைச் சேர்த்து சம்பளம் பெறாமல் இராக்காலங்களில் சமய நூல்களையும் கருவி நூல்களையும் படிப்பிக்கத் தொடங்கினார்.
* 25 ஆம் வயதில் வெள்ளிக்கிழமை தோறும் பெருந்திரளானவர்களுக்குச் சமயச் சொற்பொழிவு செய்துவந்தார்.
* பின்னர் தமது உத்தியோகத்தை விடுத்து, 26 ஆம் வயதில் யாழ்ப்பாண நகரத்தில்
* சைவப்பிரகாச வித்தியாலயத்தைத் தாபித்தார்.
* இவருடைய மாணவர்களே ஆசிரியர்கள் ஆனார்கள்.
* மருமகரும் மாணவரும் ஆன வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை பாடஞ் சொல்லுவதிலேயே காலங்கழித்தார்.
* சபாபதி நாவலர் இவருடைய மாணவர்களிற் சிறந்தவர்.
* நாவலர் என்ற பட்டம் 27 ஆம் வயதில் திருவாவடுத்துறை ஆதீனத்தால் வழங்கப்பட்டது.
* இராமநாதபுர சமஸ்தானம் நாவலர் முயற்சிகளுக்கு வலிந்து ஓத முன்வந்தது.
* சிறுவர்களுக்கும் வயது வந்தவர்களுக்கும் உபயோகமான கருவி நூல் சமய நூல்களின் இன்றியமையாமையை உணர்ந்து, புதியனவாக நூல்கள் எழுதவும் ஏட்டில் இருந்தவைகளை ஆய்ந்து அச்சிடவும் இவருக்கு பணி ஏற்பட்டது.
* இவர் எழுதிய 1ஆம், 2ஆம், 4ஆம் பால பாடங்கள், திருவிளையாடற் புராண வசனம், பெரியபுராண
  வசனம், சூசனம் என்பவை ஒரு வகையில் அமைந்திருக்கின்றன.
* இலக்கண வினா விடை, இலக்கணச்சுருக்கம், நன்னூற் காண்டிகை எழுதியதும் நன்னூல் விருத்தி இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி, தொல்காப்பிய பாயிர முதற்சூத்திர விருத்தி பிரையோக விவேகம், சேனாவரையம், தருக்க சங்கிரகம்,நிகண்டு பதிப்பித்ததும் மற்றொரு வகை.
* முதலாம் இரண்டாம் சைவ வினாவிடை, நித்திய கருமவிதி, சிவாலய தரிசன விதி புட்ப விதி, சிதம்பர மண்மியம், சைவசமய நெறியுரை, கோயிற் புராண உரை, திருமுருகாற்றுப் படை எழுதியதும், சிவஞான போத சிற்றுரை பதினோராந் திருமுறை திருவாசகம், அகத்தியர் தேவாரத்திரட்டு பதிப்பித்ததும் வேறொரு வகை.
* பாரதம், சேது புராணம், கந்த புராணம், பெரிய புராணம், திருக்குறள் பரிமேலழகர் உரை, திருக்கோவையார் உரை ஆகிய பதிப்புக்கள் வேறொரு வகை.
* தமிழ் உரை நடை ஆறுமுக நாவலரால் ஒருவகைத் திருத்தமும் அழகும் பெற்றறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆணி வேர்

*இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.*

**01. மேல்வரும் பாடலைப் பார்த்து உருப்பமைய எழுதுக**

"யாரொ டும்பகை கொள்ளல னென்றபின்
போரொ டுங்கும் புகழொடுங் காதுதன்
தாரொ டுங்கல்செய் யாதது தக்கபின்
வேரொ டுங்கெடல் வேண்டலுண் டாகுமோ".

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

..................................................................................................

05 புள்ளிகள்

**02. மேல்வரும் பழமொழியைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடதுகைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"அகத்தினழகு முகத்திற் தெரியும்"

..................................................................................................

05 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களிற்குரிய சரியான விடையினை அவற்றின் கிழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. பணக்கார வீட்டில் உணவுபெறும் பேறு பெற்ற மாணவன்
   i. உவைதுல்லா. ii. அமீன். iii. முஜீப். iv. உசேன்.

2. முஜீப் கல்வி கற்ற மதரஸாவில் இரண்டாம் பாடவேளை ஆரம்பமாகும் நேரம்
   i. காலை 9 மணி. ii. பகல் 3 மணி. iii. மாலை 5 மணி. iv. மாலை 6 மணி.

3. முஜீப்பின் மனவுறுதியைப் பார்த்து வியப்படைந்தவர்
   i. பெ. மு. ii. உஸ்தாத். iii. நண்பன். iv. பெற்றார்.

4. உஸ்தாத் ம.்ரிப் தொழுது விட்டு வெளியே வந்தபோது வாசலில் நின்றவர்
   i. அதிபர். ii. அதிகாரி. iii. பெ. மு. iv. காவலாளி.

5. முஜீப்பின் மனத்தில் ஆழமாகப் பதிந்திருந்தவை
   i. மார்க்க விடயங்கள். ii. அழகியல் விடயங்கள்.
   iii. விஞ்ஞானத் தகவல்கள். iv. உலகியல் விடயங்கள்.

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. முஜீப் காய்ச்சல் காரணமாக மூன்று நாட்கள் சாப்பிடவில்லை. [ ]
2. முஜீபின் பெற்றோர் இஸ்லாமிய மார்க்கத்தின் மீது அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள். [ ]
3. முஜீபின் பிடிவாதத்தினால் பெ.மு. மனந்திருந்தினார். [ ]
4. இறை மறையைப் போதிக்கும் வாயால் பொய் சொல்ல முடியாது. [ ]
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. முற்பணம் :-..............................................................................................

..............................................................................................

2. காணிக்கை :-..............................................................................................

..............................................................................................

3. பிரபல்யம் :-..............................................................................................

..............................................................................................

4. தோழர்கள் :-..............................................................................................

..............................................................................................

5. செய்தி :-..............................................................................................

..............................................................................................

6. தொழிற்சாலை :-..............................................................................................

..............................................................................................

3x6=18 புள்ளிகள்

**08. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. தவசிரேஷ்டர் ஒரவரின் முகத்திற் காணப்படும் களை பியதாஸ முகத்தில் தெரியக் காரணம் என்ன?

..............................................................................................

..............................................................................................

2. பியதாச முதலாளி எவ்வகையில் புத்தபகவானின் உபதேசத்திற்கு இலக்கணமாகினார்?.

..............................................................................................

..............................................................................................

3 .பியதாச முதலாளியின் கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் உருண்டு விழுந்தமைக்கான காரணம் என்ன?

..............................................................................................

..............................................................................................

4. "நூற்றுக் கணக்கான ஏழைகள் சாப்பாடின்றி, படிக்க வசதியின்றி நமக்குப் பக்கத்திலேயே கஷ்டப்படுகிறார்கள்" என்று யார், யாரிடம் சொன்னார்?

..............................................................................................

..............................................................................................

5. முத்தையாவின் பிள்ளைகள் ஏன் தந்தையைக் கட்டிக்கொண்டு அழுதனர்?

..............................................................................................

..............................................................................................

3X5=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கீழே தரப்பட்டுள்ள கருத்துப் படத்தை அவதானித்து அதனைப் பற்றிப் பத்து வரிகளுக்குக் குறையாமல் எழுதுக.



நன்றி: சிரித்திரன்

15 புள்ளிகள்

10. "நான் சென்று வந்த கல்விச் சுற்றுலா" என்ற தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மலர்மாலை

*இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம், 10ஆம் வினாவுக்கு வேறு தாளிலும் விடை தருக.*

**01. மேல்வரும் பாடல் வரிகளைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடு இசை பாடல் மறந்தறியேன்"

.................................................................................................

.................................................................................................

02 புள்ளிகள்

**02. மேல்வரும் வாக்கியத்தினைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடது கைப்பழக்கமுள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"கலை மக்களுடைய எண்ணத்தை உயர்த்துவதாக இருக்க வேண்டும்"

.................................................................................................

.................................................................................................

05 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ள வற்றிலிருந்து தெரிவு செய்து அவற்றின் கீழே கோடிடுக.**

1. மலர் மாலை என்ற பாடலைப் பாடியவர்
   i. ஆறுமுகநாவலர். ii. சுவாமிவிபுலானந்த அடிகள். iii. சேக்கிழார். iv. அப்பர்.
2. வேலை என்ற சொல்லின் ஒத்தகருத்துச் சொல்
   i. கடல். ii. கடமை. iii. ஆயுதம். iv. இரும்பு.
3. அழகு என்ற சொல்லின் எதிர்க்கருத்துச் சொல்
   i. கோலம். ii. அலங்கோலம். iii. வடிவு. iv. வளைவு.
4. மலர்மாலைக்குரியவர்
   i. இறைவன். ii. பிள்ளையார். iii. மலர்மகள். iv, சிவபெருமான்.
5. தாரகை நடுவே தண்மதி போல என்ற உவமைத் தொடர் உணர்த்துவது
   i. பிரியா நட்பு. ii. தலைமைச்சிறப்பு. iii. ஒற்றுமை. iv. தீராப்பகை.

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றுக்கு நேரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1. உவமை அணியில் உவமானம், உவமேயம் என்னும் இரண்டு பகுதிகள் உள்ளன. [ ]
2. செய்தேன் என்பது தன்மை ஒருமை வினைமுற்று. [ ]
3. எழுதாதே என்பது உடன்பாட்டு வினை. [ ]
4. வியங்கோள் வினையானது மூவிடத்திலும் வரும். [ ]
5. நீங்கள் வாழ்க என்பது ஏவல்வினை. [ ]

1x5=5 புள்ளிகள்

05. தொடர்பு படுத்துக.

| | |
|---|---|
| 1. சீலம் | கோதை |
| 2. பார் | சூரியன் |
| 3. மாலை | புனைதல் |
| 4. கதிர் | ஒழுக்கம் |
| 5. தொடுத்தல் | உலகம் |

1x5=5 புள்ளிகள்

06. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1. மாலை கட்டுவதற்குரிய மலர்களை ஏன் அதிகாலையிலேயே பறிக்கவேண்டும்?
..............................................................................................................................
..............................................................................................................................
2. இறைவன் எவ்வாறு எம்மை ஆள்கிறார்?
..............................................................................................................................
..............................................................................................................................
3. மாலையின் புனிதத் தன்மையைக் கூறுக.
..............................................................................................................................
..............................................................................................................................
4. குணவாகு பெயருக்கு ஓர் உதாரணம் தருக.
..............................................................................................................................
5. தேன் + துளி என்பதைச் சேர்த்து எழுதுக.
..............................................................................................................................

3x6=15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07. மேல்வரும் கவிதையைக் கவனமாக வாசித்து அதன் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை தருக.

ஒண்டு......... ரண்டு.............மூண்டு............
நாலு.............அஞ்சு...........
ஆறு...............
.........................

சங்கக் கடையில்
வாங்கிய அரிசிக்குள்
ஒன்றொன்றாய்ப்
பொறுக்கிச் சேர்த்த பயறு
காக்கிலோ தேறும்.

"என்ரை செல்லம்
எலிக்குஞ்சுச் செட்டியார் மாதிரி
நாளைக்குப் பெரீஇய
பணக்காரியாய் வரும்".

அம்மா புடைக்கத் தந்த
அரிசிக்குள் பொறுக்கிச் சேர்த்த
பயறு
என் வீட்டுத் தோட்டத்திற்
பயிரானதைக் கண்டு
அம்மா வாயாரப் பாராட்டினவா.

பயிர் விளைந்து
பணங் கைக்கு வந்தால்,
கம்ப்யூட்டர் வாங்கலாம்
கவிதை எழுதலாம்
பயிருடன் போட்டியாய்
என்னாசையும் வளர்ந்தது.

ஐயோ ...................,

அயல் வீட்டுக் கோழி
வேலியேறிக் குதித்து
என் பயிரை
அழித்து விட்டது.

★

கோழிக்கு நானென்ன கொடுமை
செய்தேன்?

சுயமாய் முன்னேற
விரும்பியது குற்றமா?

அயல் வீட்டான்
எங்களை வாழவே
விடமாட்டானா?

நிவாரணப் பிச்சை தான்
எமக்கிங்கே
நிரந்தரமா?

குப்பையைக் கிளறும்
கோழியா அறியும்
வாழ்தலின் பெறுமதி !

1. இந்தக் கவிதைக்குப் பொருத்தமான தலையங்கம் எழுதுக.

.................................................................................................................................

2. அம்மா எதற்காக மகளைப் பாராட்டினார்?

.................................................................................................................................

.................................................................................................................................

3. எலிக்குஞ்சுச் செட்டியார் எதற்கு உதாரணமாகக் கூறப்படுகிறார்?

.................................................................................................................................

.................................................................................................................................

4. பயிருடன் போட்டியாய் என்னென்ன ஆசைகள் வளர்ந்தன?

.................................................................................................................................

.................................................................................................................................

5. எவ்வாறு பயிரழிந்தது?

.................................................................................................................................

.................................................................................................................................

10 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மேல்வரும் உவமைத்தொடர்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. பூவும் மணமும் போல :-..............................................................................................................

.....................................................................................................................................................

2. கடன்பட்டார் நெஞ்சம் போல :-..............................................................................................................

.....................................................................................................................................................

3. செந்தாமரை போல :-..............................................................................................................

.....................................................................................................................................................

4. நவில்தொறும் நூல்நயம் போல :-..............................................................................................................

.....................................................................................................................................................

5. வேலியே பயிரை மேய்ந்தது போல :-..............................................................................................................

.....................................................................................................................................................

6. ஈருடலும் ஓருயிரும் போல :-..............................................................................................................

.....................................................................................................................................................

3x6=18 புள்ளிகள்

**09. ஒரு தந்தை தனது மகன் இறந்து போன துயரம் குறித்துத் தன்னுடைய நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தின் உடற்பகுதி கீழே தரப்படுகின்றது.**

என் மகன் எட்கார், வீட்டின் ஜீவநாடி போலிருந்தான். அவன் இறந்துவிட்ட பிறகு வீடு துன்பமய மாயிருக்கிறது. திக்கற்றதுபோல் ஆகிவிட்டது. ஒவ்வொரு நிமிஷமும் அவனைப்பற்றி நினைக்க வேண்டியிருக்கிறது. அப்படி நினைக்காமல் இருக்க முடியவில்லை. அப்பொழுது எங்களுக்கு உண்டாகும் துயரத்தை வருணிக்க முடியாது. நான் எத்தனையோ் துன்பங்களை அனுபவித்திருக்கின்றேன். ஆனால் உண்மையான துயரம் இன்னதென்பதை இப்பொழுதுதான் தெரிந்துகொண்டேன்.

“மகான்கள் இயற்கையோடும் உலகத்தோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறார்கள். தங்களுக்கு உற்சாகம் அளிக்கக்கூடிய பல அம்சங்கள் அந்த இயற்கையிலும் உலகத்திலும் இருப்பதைக் காண்கிறார்கள். இதனால் தங்களுக்கு ஏற்படுகின்ற எவ்விதமான கஷ்டத்தையும் அவர்கள் சுலப மாகச் சமாளித்துக் கொண்டு வருகிறார்கள்”. இப்படி பிரான்சிஸ் பேக்கன் சொல்கிறார். நான் அப்படிப்பட்ட மகான்களிலே ஒருவனில்லை. எனது குழந்தையின் மரணம் என்னை அதிகமாகப் பாதித்துவிட்டது. அ்.து இறந்த முதல் நாள் நான் எப்படித் துக்கப்பட்டேனோ, அப்படியே தான் இப்பொழுதும் துக்கப்பட்டுக் கொண்டிருக்கிறேன். என் மனைவியும் மனமுடைந்து போய்விட்டாள்.

**இந்தக் கடிதத்தை எழுதிய தந்தைக்கும் அவரது மனைவிக்கும் ஆறுதல் தெரிவித்து ஓர் அநுதாபக் கடிதம் எழுதுக.**

15 புள்ளிகள்

**10. “வளரும் பயிரை முளையிலே தெரியும்” என்ற பழமொழிக்கு ஏற்ற கதை ஒன்று எழுதுக.**

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயல் - 20

# நளவெண்பா

*இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.*

**01. மேல்வரும் பாடலைப் பார்த்து உறுப்பமைய எழுதுக.**

"வெண்பாவிற் புகழேந்தி பரணிக்கோர் செயங்கொண்டான் விருத்தம் எனும்
ஒண்பாவில் உயர் கம்பன் கோவை உலா அந்தாதிக்கு ஒட்டக்கூத்தன்
கண்பாய கலம்பகத்திற்(கு) இரட்டையர்கள் வசைபாடக் காளமேகம்
பண்பாகப் பகர்சந்தம் படிக்காசலால் ஒருவர் பகரொணாதே"

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

..........................................................................................................

05 புள்ளிகள்

**02. மேல்வரும் பழமொழியைப் பார்த்து இடதுகையால் எழுதுக. இடது கைப்பழக்கமுள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"குற்றம் பார்க்கிற் சுற்றமில்லை"

..........................................................................................................

05 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அவற்றின் கீழ்க் கோடிடுக.**

1 நளவெண்பா என்ற நூலை இயற்றியவர்.
i. புகழேந்தி. ii. ஒட்டக்கூத்தர். iii. ஔவையார். iv. புலவர்.

2 வீமராசனின் மகள்
i. சீதை. ii. தமயந்தி. iii. திரௌபதி. iv. சூர்ப்பனகை.

3 நளன் மீது பொறாமை கொண்டவர்கள்
i. குடிமக்கள். ii. முனிவர்கள். iii. தேவர்கள். iv. அரசர்கள்.

4. நளன் இன்பமாக வாழ்ந்த காலம்
i. 1 வருடம். ii. 3 வருடம். iii. 5 வருடம். iv. 12 வருடம்.

5 .பாம்புகளின் தலைவன் பெயர்
i. ஆதிசேடன். ii. வாசுகி. iii. கார்க்கோடன். iv. செட்டிநாகம்

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04 மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறியினுள் எழுதுக.

1. வீமராசன் தன் மகளுக்குச் சுயம்வரம் நடத்தத்தீர்மானித்தான். [ ]
2. வாடிய முகத்துடன் வானோக்கித் திரும்பிய தேவர்கள் வழியிற் கலிபுருஷனைச் சந்திக்கவில்லை. [ ]
3. கலியின் செயல்கள் நளனை வருத்தவில்லை. [ ]
4. வீமராசன் நளனை அடையாளங் கண்டு கொள்ள முடியாமல் மயங்கி நின்றான். [ ]
5. ஆதிசேடன் என்னும் பாம்பு தன்தலையிலே பூமியைச் சுமந்து வைத்திருக்கிறது. [ ]

1x5=5 புள்ளிகள்

05. தொடர்புபடுத்துக.

| | |
|---|---|
| 1. வெண்பா | பாரதி |
| 2. விருத்தம் | புகழேந்தி |
| 3. வசை | கம்பன் |
| 4. பரணி | காளமேகம் |
| 5. சிந்து | செயங்கொண்டார். |

1x5=5 புள்ளிகள்

6. மேல்வரும் பாடலின் பொருளை உமது உரை நடையில் எழுதுக.

"ஆதி மறைநூல் அனைத்தும் தெரிந்துணர்ந்த
நீதி நெறியாளர் நெஞ்சம்போல் - யாதும்
நிரப்பாமல் எல்லாம் நிரம்பிற்றே பொற்றேர்
வரப்பாகன் புக்க மனை."

..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................
..........................................................................................

10 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**7. மேல்வரும் உவமைத்தொடர்களின் பொருள் நன்கு விளங்குமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. கடன்பட்டார் நெஞ்சம் போல் :- ..............................

2. பாகுபோல் :- ..............................

3. தங்கரதம் போல் :- ..............................

4. குங்குமப்பூப்போல் :- ..............................

5. சிலைமேல் எழுத்துப் போல் :- ..............................

**8. மேல் வரும் வினாக்களுக்கு விடை தருக.** **3X5=15 புள்ளிகள்**

1. தன்னுடைய மக்களை நேரிலே பார்த்ததும் நளன் என்ன செய்தான்?

2. "எங்கோமான், வாய்மையே கண்டாய் வலி" என்பது யாரால் யாருக்குக் கூறப்பட்டது?

3. கலியின் இயல்புகள் எவை?

4. கார்க்கோடகன் கொடுத்த ஆடைகளை நளன் என்ன செய்தான்?

5. வாருகன் உண்மையிலே நளனே ஆவான் என்பதை வீமராசன் எவ்வாறு அறிந்து கொண்டான்?

**3X5=15 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**9. தரம் எட்டிற் கற்கும் மாணவி ஒருவர் தம் வசமுள்ள நூல்களின் பட்டியல் ஒன்றைத் தயாரித்தார். அப்பட்டியல் இங்கே தரப்படுகிறது.**

| இல | நூலின் பெயர் | உள்ளடக்கம் | நூலாசிரியர் | வெளிவந்த ஆண்டு |
|---|---|---|---|---|
| 01. | சமவெளி நோக்கி | கவிதை/சிறுகதை/நாடகம் | வளநாடன் | 2001 |
| 02. | இயல்பினை அவாவுதல் | கவிதை | அமரதாஸ் | 1999 |
| 03. | களத்திலேயே வீழ்வோம் | மொழிபெயர்ப்புக்கவிதை | குழல் | 2001 |
| 04. | என்கவிதை | கவிதை | சி. ஆதிலட்சுமி | 2000 |
| 05. | ஒரு மழைக்கால இரவு | சிறுகதை | தாமரைச்செல்வி | 1998 |
| 06. | ஆரணியக் கனவு | சிறுகதை | பிரதீபகுமாரன் | 2000 |
| 07. | மனமும் மனத்தின் பாடலும் | கவிதை | முல்லைக்கமல் | 1999 |
| 08. | பூகம்பப் பூக்கள் | கவிதை | ச.வே.பஞ்சாட்சரம் | 2000 |
| 09. | அந்த நாளை அடைவதற்காய் | கவிதை | சுஜந்தன் | 2000 |
| 10. | கண்ணம்மா | கவிதை | தி.உதயசூரியன் | 2002 |
| 11. | துளித்துளியாய் | நெடுங்கதை | பொன்.கணேசமூர்த்தி | 2002 |
| 12. | நாமும் பேசுவோம் | மேடைப்பேச்சு | கு.மணிமேகலை | 2002 |
| 13. | மருதத்திணை | ஆராய்ச்சி | சொ.வாசுகி | 2003 |
| 14. | எழுதாத உன் கவிதை | கவிதை | தொகுப்பு | 2001 |
| 15. | காலவெளி | கவிதைகளும்,சிறுகதைகளும் | சு. மகேந்திரன் | 2002 |

மேலே தரப்பட்ட பட்டியலிலுள்ள நூல்களை அவற்றின் உள்ளடக்கத்தின் அடிப்படையில் மறு அட்டவணைப்படுத்துக.

15 புள்ளிகள்

**10. சமகால நாட்டு நடப்புக்கள் குறித்து உரையாடும் இருவரது உருவப்படம் இங்கே தரப்படுகிறது. இவர்களுக்கிடையே நடைபெறும் உரையாடலை எழுதுக.**



நன்றி: சிரித்திரன்

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



செயல் - 21

# இணையம்

***இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.***

**01. மேல்வரும் வாக்கியத்தைப் பார்த்து உறுப்பமைய எழுதுக**

"தன்செயல்கள் அனைத்திற்கும் பதில் சொல்லக்கூடியவனாக
மனிதன் இருக்கவேண்டும்"

.............................................................................................................................

.............................................................................................................................

02 புள்ளிகள்

**02. மேல்வரும் பழமொழியினைப் பார்த்து இடது கையினால் எழுதுக இடதுகைப்பழக்கம் உள்ளவர்கள் வலது கையினால் எழுதுக.**

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழும் நாப்பழக்கம்"

.............................................................................................................................

05 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவுசெய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. கமலாவின் ஒன்றுவிட்ட சகோதரி வசிக்கும் நாடு
   i. கனடா. ii. இந்தியா. iii. ரஷ்யா. iv. நியூசிலாந்து.
2. இணையத்தின் வித்தாக அமைந்தது
   i. ஆர்பாநெற். ii. மைக்ரோ கம்ப்யூட்டர். iii. வானொலி. iv. தொலைபேசி.
3. தமிழில் கடிதங்களை மின் அஞ்சலில் அனுப்பும்போது ஏற்பட்ட சிக்கல்களுக்குத் தீர்வாக அமைந்தது.
   i. தமிழ் இணையம். ii. வின்டோ 2000. iii. கம்பன். iv. எம்.எஸ்.டொஸ்.
4. இணையத்தை முதன்முதலில் பயன்படுத்தியவர்கள்
   i. வியாபாரிகள். ii. அரசியல்வாதிகள்.
   iii. பல்கலைக்கழக மாணவர்கள். iv. ஆயுத ஆராய்ச்சியாளர்கள்.
5. புதிய புதிய கலைச்சொற்கள் உருவாகக் காரணமாக அமைவது
   i. சனத்தொகை வளர்ச்சி. ii. விஞ்ஞான வளர்ச்சி.
   iii. பொருளாதார வளர்ச்சி. iv. இலக்கிய வளர்ச்சி.

1x5=5 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" என்றும் பிழையாயின் "பிழை" என்றும் அவற்றிற்கு நேரேயுள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. கொழும்பிலுள்ள பாடசாலை ஒன்றில் படித்தால் கணனி இயக்குவதில் கெட்டிக்காரர் ஆகலாம். [ ]
2. கமலாவின் கணனித் திரையிலுள்ள கட்டளைகள் எல்லாம் சிங்கள மொழியில் எழுதப்பட்டுள்ளன. [ ]
3. கணனி உற்பத்தியில் 1975ம் ஆண்டில் பெரும் புரட்சி ஏற்பட்டது. [ ]
4. தமிழில் எழுதப்பட்ட வலைப்பக்கங்கள் எதுவும் தற்பொழுது இணையத்தில் இல்லை. [ ]
5. தமிழ் இணையம் 99 மகாநாடு கொழும்பில் நடைபெற்றது. [ ]

**1x5=5 புள்ளிகள்**

**05. தற்பொழுது கணனிப் பாவனையிலுள்ள தமிழ் எழுத்து வடிவங்களின் பெயர்கள் சில அதே எழுத்து வரிவடிவங்களிற் கீழே தரப்படுகின்றன இவற்றை அகர வரிசையில் ஒழுங்குபடுத்துக.**

| | | | |
|---|---|---|---|
| ஆனந்தபைரவி | ........................ | நாகநந்தினி | ........................ |
| உதயம் | ........................ | பூபாளம் | ........................ |
| அடங்காபிடாரி | ........................ | கல்யாணி | ........................ |
| சங்கராபரணம் | ........................ | மலையமுதம் | ........................ |
| பிச்சைக்காரி | ........................ | பூங்கொடி | ........................ |
| கார்முகில் | ........................ | கிழவி | ........................ |
| தனுசா | ........................ | சிங்காரி | ........................ |
| சிந்துபைரவி | ........................ | மோகனம் | ........................ |
| சரஸ்வதி | ........................ | சண்முகப்பிரியா | ........................ |
| கிந்தோளம் | ........................ | கீதப்பிரியா | ........................ |
| கலகம் | ........................ | நல்லூர் | ........................ |
| பாமினி | ........................ | யோதி | ........................ |
| சிரிப்பு | ........................ | மல்லிகை | ........................ |

**08 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**06. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

மாணவர்களுக்கு, இணையத்தில், தமிழ், குறியீட்டையும், தேவை, தனியாருக்கும், தொழில்நுட்ப, சமுதாயம், தகவல், வழிவகுக்கும்

1. எல்லோரும் தாம் தாம் விரும்பிய வரிவடிவத்தையும் .................................................. உபயோகித்து .................................. எழுத்துக்கான மென்பொருளைத் தயாரித்தார்கள்.
2. கணினியைக் கண்டு பிடித்தவர்கள் இத்தகைய பெரிய .................................. புரட்சிக்கு அது .............................................. என்று கனவுகூடக் கண்டிருக்கமாட்டார்கள்.
3. 1990ம் ஆண்டுகளின் தொடக்கத்தில் .................................. இணையத்தில் இடமளிக்க வேண்டிய .................................. ஏற்பட்டது.
4. பாடசாலை .................................. உதவக்கூடிய பல விடயங்கள் .................................................. நிறைய உள்ளன.
5. அறிவியல் .................................................. வளர்சிக்கு ஏற்ப .................................................. மாறத் தொடங்கியது

**10 புள்ளிகள்**

**07. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. வெளிநாடுகளில் வாழும் கமலாவின் உறவினர்கள் எந்தெந்த மொழிகளைக் கற்கின்றனர்?
..............................................................................................................................................
..............................................................................................................................................
2. மின்னஞ்சல் மூலமாக தமிழ் மொழியில் கடிதங்கள் அனுப்ப முற்பட்டபோது ஏற்பட்ட சிக்கல் என்ன?
..............................................................................................................................................
..............................................................................................................................................
3. இணையத்தின் ஊடாகக் கமலாவின் குடும்பத்தினர் பெறும் பயன்கள் எவை?
..............................................................................................................................................
..............................................................................................................................................
4. தமிழ் எழுத்து மென் பொருள்களை எங்கிருந்து செலவில்லாமல் பெறலாம்?
..............................................................................................................................................
..............................................................................................................................................
5. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்துடன் தொடர்புகொள்ள மின்ஞ்சல் முகவரி w w w. Doentets. என்பதாகும். இதேபோல் நீங்கள் அறிந்த ஏதேனுமொரு இணையதள முகவரியை எழுதுக?
..............................................................................................................................................

**3X5=15 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**08. மேல்வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. அறிவியல் :-..........................................................................................
..........................................................................................
2. பாவனை :-..........................................................................................
..........................................................................................
3. கட்டளை :-..........................................................................................
..........................................................................................
4. குறியீடு :-..........................................................................................
..........................................................................................
5. சதுரங்கள் :-..........................................................................................
..........................................................................................

3X5=15 புள்ளிகள்

**09. தரம் எட்டிற் கற்கும் ஒரு மாணவன் தனது நண்பனுக்கு எழுதிய கடிதம் கீழே தரப்படுகிறது.**

சாவகச்சேரி.
23-06-2002

அன்புள்ள மயூரனுக்கு,

நாங்கள் நல்ல சுகமாக இருக்கின்றோம். உங்களது சுகத்திற்கும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். நீங்கள் எழுதிய கடிதம் நேற்றுக் கிடைத்தது. வாசித்து மகிழ்ந்தோம். நீங்கள் மிகுந்தலைக்குக் கல்விச் சுற்றுலா போனதைப் பற்றி எழுதியதை வாசிக்கும் பொழுது நாங்களும் உங்களுடன் மிகுந்தலைக்கு வந்ததுபோல் இருந்தது.

இங்கே எங்களுக்குப் பல புதிய ஆசிரியர்கள் வந்துள்ளனர். இடம்பெயர்ந்து சென்ற பல ஆசிரியர்களும் மாணவர்களும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிவிட்டனர். பாடப்புத்தகங்களும் போதிய அளவு வந்துள்ளன. ஆனால் சீருடைத் துணிதான் ஒழுங்காகக் கிடைக்கவில்லை.

முன்னர் என்றால் எங்களுக்குரிய சீருடைத் துணிகளை வகுப்பாசிரியரே பாடசாலையில் வைத்துத் தருவார். ஒரு கரைச்சலும் இல்லை. இப்பொழுது விதானை வீட்டில்போய் முத்திரை வாங்கி வந்து சங்கக்கடையில் துணி வாங்க வேண்டும். எனக்குரிய முத்திரையை எடுக்கவென்று அப்பா விதானை வீட்டை போனபோது அங்கே எனது பதிவு இல்லையென்று முத்திரை தரவில்லை. அதன்பின்னர் பள்ளிக்கூடத்திற்கும் விதானை வீட்டிற்கும் ஏ.ஜீ.ஏஇடம் என்றும் என்று அப்பா பல நாட்கள் அலைந்து திரிந்தும் முத்திரை கிடைக்கவில்லை.

எங்கடை அப்பா ஒரு நாளைக்கு வேலைக்குப் போனால் இருநூறுரூபா சம்பளம் கிடைக்கும். ஆனால் சீருடைத் துணியின் விலையோ அதைவிடக் குறைவு. அப்பா துணிக்காக அலைந்து திரிந்துவிட்டு "இனிமேல் விதானை வீட்டை போகமாட்டேன். என்ரை பிள்ளைக்கு நான் உழைத்து உடுப்பு வாங்கித்தருவேன்" என்று சொல்ல "துணி எடுக்காவிட்டால் வசதியான ஆக்கள் என்று இனிமேல் ஒரு நிவாரணமும் தரமாட்டான்கள்" என்று அம்மாதான் ஆய்க்கினைப்பண்ணி அப்பாவைப் போகச் சொன்னவா. போயும் ஒரு பயனும் இல்லை. அப்பா வேலை செய்து கிடைக்கிற கூலியை இழந்ததுதான் மிச்சம். அவ்வளவு நாளும் அப்பா வேலைக்கும் போயிருந்தா பத்துப் பதினைந்து மீற்றர் துணி வாங்கியிருக்கலாம்.

சீருடைத்துணி மாதிரி வருங்காலத்தில் பாடப் புத்தகமும் விதானைவீட்டில் துண்டு வாங்கித்தான் வாங்க வேண்டுமென்று வந்தால் பேசாமல் படிக்கிறதை விட்டிட்டு மாடுமேய்க்கப் போறதுதான் நல்லது.

மயூரன் நீங்கள் எப்போது இங்கு வருவீர்கள்? உங்களை நேரில்பார்க்க ஆசையாக உள்ளது. இக்கடிதம் கண்டதும் உடன் பதில் எழுதவும்.

நன்றி
வணக்கம்

உங்கள் அன்பை மறவாத
சி. பாலகுமார்.

இந்தக் கடிதத்திற்குப் பதிற் கடிதம் எழுதுக.

15 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. கீழேதரப்பட்டுள்ள கருத்துப் படத்தில் தாய்க்கும் மகளுக்குமிடையே ஒரு தைப்பொங்கல் தினத்தில் நடைபெறக்கூடிய உரையாடலை எழுதுக.



நன்றி: சிரித்திரன்

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கவிஞனின் இதயகீதம்

**இவ்வினாத்தாளில் எல்லாமாக 10 வினாக்கள் உள்ளன. 1 தொடக்கம் 8 வரையுள்ள வினாக்களுக்கு இத் தாளிலும் 9ஆம் 10ஆம் வினாக்களுக்கு வேறு தாளிலும் விடை தருக.**

**01. மேல்வரும் நூற்பாவினைப் பார்த்து பார்த்து உருப்பமைய எழுதுக.**

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையி னானே".

.................................................................................................

.................................................................................................

02 புள்ளிகள்

**02. மேல்வரும் வாக்கியத்தைப் பார்த்து இடது கையால் எழுதுக. இடதுகைப் பழக்கமுள்ளவர்கள் வலது கையால் எழுதுக.**

"உண்மையே இலக்கியத்தின் இரகசியம்".

.................................................................................................

05 புள்ளிகள்

**03. மேல்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையினை அவற்றின் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

1. வாழ்க்கையை அனுபவித்தல் என்பது
   i. கடற்குளிப்புப் போன்றது. ii. மலர்ப்படுக்கை போன்றது.
   iii. பாலைவனப் பயணம் போன்றது. iv. ஆற்றில் மூழ்குவது போன்றது.

2. சமுதாயத்தின் போக்கினைப் படம் பிடித்துக்காட்டுவது.
   i. இலக்கியம். ii. இலக்கணம். iii. கவிதை. iv. புத்தகம்.

3. மேலை நாகரிகமென்ற போர்வையில் இடம் பெறும் ஒவ்வாத நடத்தைகளைக் கவிஞர்.
   i. அறிமுகம் செய்தார். ii. வெறுத்தார். iii. ஊக்குவித்தார். iv. பாராட்டினார்.

4. முஸ்லிம்கள் தங்களுடைய பழம்பெருமையை நன்குணர்ந்து செயலாற்றினால்
   i. முன்னேற முடியும். ii. போரிட முடியும்.
   iii. அரசாள முடியும். iv. உலகத்திற்கு வழிகாட்ட முடியும்.

5. சேர். அல்லாமா முகம்மது இக்பாலைத் தேசியக் கவிஞராகப் போற்றும் நாடு
   i. இந்தியா. ii. இலங்கை. iii. பாகிஸ்தான். iv. நேபாளம்.

1X5=05 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**04. மேல்வரும் கூற்றுக்கள் சரியாயின் "சரி" எனவும் பிழையாயின் "பிழை" எனவும் அவற்றுக்கு நேரே உள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

1. அல்லாமா என்றால் பேரறிஞர், பேராசான் என்று பொருள்படும். [ ]
2. அறிவுத்திறனும் ஆராய்ச்சியும் விஞ்ஞான விருத்தியும் மேலைநாட்டுச் சிறப்புக்கும் மேன்மைக்கும் காரணமாக அமையவில்லை. [ ]
3. மேலைத் தேசத்தவை எல்லாமே மேன்மையானவை என்று உயர்த்திப் பேசுவது தவறான மனோபாவமாகும். [ ]
4. கவிஞர்கள் தோன்றாத சமூகம் இருக்கமுடியாது. [ ]
5. நிலைமொழி ஈறும் வருமொழி முதலும் பொருள் பொருத்தமுறச் சேர்வது சொற்புணர்ச்சி எனப்படும். [ ]

1X5=05 புள்ளிகள்

**05. தொடர்புபடுத்துக.**

| | |
|---|---|
| 1. ஜாவிது நாமா | ஆத்மீக சிந்தனை |
| 2. கீழைத்தேயம் | இலக்கியம் |
| 3. மேலைத்தேயம் | பிரபஞ்சம் |
| 4. கவிஞனின் கற்பனை | அமரகாவியம் |
| 5. இறைவனின் கற்பனை | விஞ்ஞானச் சிந்தனை |

1X5=05 புள்ளிகள்

**06. மேல்வரும் வாக்கியங்களிலுள்ள இடைவெளிகளை நிரப்புவதற்குப் பொருத்தமான சொல்லைக் கீழே தரப்பட்டுள்ளவற்றிலிருந்து தெரிவு செய்து எழுதுக.**

கவிஞர், புறக்கணித்திட, சிந்தனைத், மனிதன், விழிப்புக்குக், தன்னளவில், கல்வியறிவை, விரைவு, இஸ்லாமிய, சிந்தனைத், உயிர்நாடி.

1. சேர். அல்லாமா முகம்மது இக்பால் ................................................ இலக்கிய வரலாற்றில் மட்டுமன்றி இஸ்லாமியச் ................................................ துறையிலும் முக்கியமான இடத்தைப் பெறுகின்றார்.
2. இலக்கியத்தின் ................................................ உணர்ச்சி. இந்த உணர்ச்சியின் உண்மை தான் புதிய ................................................காரணமாக அமைகின்றது.
3. உலகில் ................................................ உயர்ந்த படைப்பாவான். அத்தகைய மனிதன் ................................................விழிப்படைய வேண்டும்.
4. மேனாட்டின் நாகரிக மோகத்தைக் கண்டித்த ................................................ அதனை அப்படியே ................................................ வேண்டும் என்று கூறவில்லை.
5. பணத்தைப் போற்றி................................................ அலட்சியம் செய்வது தவறானது. அது ஒரு சமுதாயத்தின் வீழ்ச்சியை ................................................ படுத்தும்.

2X5=10 புள்ளிகள்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**07. மேல்வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. கவிஞர் சேர் முகம்மது இக்பால் தன்னுடைய நாட்டு மக்கள் எத்தகையவர்களாக மாற வேண்டுமென விரும்பினார்?

.................................................................................................................................

.................................................................................................................................

2. காலத்தால் அழியாது நின்று நிலைக்கக்கூடிய இலக்கியங்கள் எப்படிப்பட்டவை?

.................................................................................................................................

.................................................................................................................................

3. கவிஞர்கள் எவ்வாறு சுதந்திர வேட்கையை மக்களுக்கு ஊட்டுகின்றனர்?

.................................................................................................................................

.................................................................................................................................

4. சேர் அல்லாமா முகம்மது இக்பால் எதன் பொருட்டு அளவற்ற பெருமையுடையவராக இருந்தார்?

.................................................................................................................................

.................................................................................................................................

5. இயல்புப் புணர்ச்சிக்கு இரண்டு உதாரணங்கள் தருக.

.................................................................................................................................

.................................................................................................................................

**3X5=15 புள்ளிகள்**

**08. மேல் வரும் சொற்களின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் அமைத்து எழுதுக.**

1. நாகரிகம் :-.........................................................................................................

.................................................................................................................................

2. இரகசியம் :-.........................................................................................................

.................................................................................................................................

3. பேரறிஞர் :-.........................................................................................................

.................................................................................................................................

4. காவியம் :-.........................................................................................................

.................................................................................................................................

5. தேசியம் :-.........................................................................................................

.................................................................................................................................

6. மேன்மை :-.........................................................................................................

.................................................................................................................................

**3x6=18 புள்ளிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09. தரம் எட்டிற் கற்கும் மாணவரொருவரின் தாயார் கடையில் சீனிச்சரை சுற்றிக் கொடுத்த கடதாசியை வாசித்துவிட்டு "இதைக்கவனமாக வைத்திரு" என்று அக் கடதாசியைத் தன் மகனிடம் கொடுத்தார். அக்கடதாசியில் உள்ள தகவல் கீழே தரப்பட்டுள்ளது.

# ஆலயத்தில், அறிவுலக மேதைகள்!



ஆலயங்களில் ஆண்டவன் உருவங்கள் மாத்திரம் இருப்பதாகத்தான் நாம் இதுவரை கேள்விப்பட்டிருக்கிறோம். ஆனால் நியூயோர்க் நகரத்தின் புகழ் பெற்ற தேவாலயமொன்றின் வெண்மைச் சுவர்களில் அமரத்துவம் பெற்ற அறுநூறு பெரியார்களின் உருவங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அவர்களில் சிலர் மகான்கள், சிலர் தத்துவஞானிகள், சிலர் பேரரசர்கள், அவ்வுருவங்களில் பதின்நான்கு விஞ்ஞான வித்தகர்களின் உயிரோவியங்கள். கிறிஸ்து பிறப்பதற்கு முன் வாழ்ந்த ஹிப்போகிராட்டீஸ் முதல் 1955இல் அமரத்துவமடைந்த அல்பேட் ஐன்ஸ்ரீன் வரை பதின்னான்கு உருவங்கள் அங்கு இடம்பெற்றுள்ளன. ஐன்ஸ்ரீன் உயிரோடு இருக்கும்போதே அவருடைய உருவம் அவ்விடத்தில் இடம்பெற்றுவிட்டது.

அந்தத் தேவாலயத்தில் வாரந்தோறும் தொழுகைக்கு வரும் கிறிஸ்தவ மக்களுக்கு உயிரோடு இருக்கும் அல்பேட் ஐன்ஸ்ரீனின் உருவம் அங்கு எப்படி இடம்பெற்றது என்பது அன்று புரியாத புதிராகவே இருந்தது.

அந்த மாதா கோவிலில் அவ் உருவங்களைப் படைக்கத் திட்டமிட்டபோது, டாக்டர் ஹரி எமர்சன் ஃபால்டிக் என்பவர் அமெரிக்க விஞ்ஞானிகளுக்குக் கடிதங்கள் மூலம் ஒரு விண்ணப்பம் விடுத்தார். அவ்விண்ணப்பத்தில் விஞ்ஞானத்தில் தலைசிறந்த பதின்னான்கு விஞ்ஞானிகளைக் குறிப்பிட்டுத் தெரிவிக்கும்படி கேட்டிருந்தது. ஒவ்வொரு விஞ்ஞானியும் தமக்குத் தெரிந்த உலக விஞ்ஞானிகளில் பதின்னான்கு பெயர்களைக் கொண்ட பட்டியலை அனுப்பிவைத்தனர். ஒவ்வொருவரின் பட்டியலும் மாறுபட்டிருந்தது. பெரும்பாலானவர்கள் கலிலியோ, நியூட்டன் ஆகிய விஞ்ஞானிகளின் பெயர்களைக் குறிப்பிட்டிருந்தார்கள்.ஆனால் அத்தனைபேரும் தமது பட்டியலில் அல்பேர்ட் ஐன்ஸ்ரீனின் பெயரைத் தவறாது சேர்த்திருந்தனர். புனிதமான அம்மாதா கோவிலில் ஐன்ஸ்ரீனின் உருவம் அவர் உயிரோடிருக்கும்போதே இடம்பெற்றுவிட்டதில் ஆச்சரியமெதுவுமில்லை.

"பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்ரீனும்" என்னும் நூலிலிருந்து

நன்றி: நங்கூரம்

இதேபோல் உங்களிடமுள்ள நல்ல தகவலொன்றை எழுதுக.

15 புள்ளிகள்

10. "தொழிற் கல்வியின் அவசியம்" என்னும் தலைப்பில் ஒரு கட்டுரை எழுதுக.

20 புள்ளிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திறந்த நூற் பரீட்சை - III

தரம் எட்டு தமிழ்ப் பாடநூலிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இருபது வாக்கியங்கள் கீழே தரப்படுகின்றன. அவ்வாக்கியங்கள் பாடநூலில் எந்தப் பாடத்தில் எந்தப் பந்தியில் எந்தெந்த வரிகளில் எத்தனையாம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன என்பதை பாடப்புத்தகத்தைக் கவனமாக வாசித்து எழுதுக.

01. "அநீதிகளைச் சுட்டிக் காட்ட வேணும். இனிமேல் புத்தியோடு நடந்துகொள் அப்போதுதான் இந்த உலகத்தில் வாழமுடியும்"

பாடம்:-..........

பந்தி:-.......... வரிகள்:-.......... பக்கம்:-..........

02. "மேற்குத் திக்கிலே பகலவன்
விழுந்ததும் திங்கட்
பாற் குடத்தின் வாய் நிமிர்ந்தது".

பாடம்:-..........

பந்தி:-.......... வரிகள்:-.......... பக்கம்:-..........

03. "உண்மையை விளக்கி நின்றாள்.
ஒருவரும் அசைந்தா ரில்லை"

பாடம்:-..........

பந்தி:-.......... வரிகள்:-.......... பக்கம்:-..........

04. "மாலைக்கு மயக்கம் தோன்ற
வெயிலவன் மறைந்து போனான்"

பாடம்:-..........

பந்தி:-.......... வரிகள்:-.......... பக்கம்:-..........

05. "அவரிடம் நேரடியாகப் பேசி ஏதும் செய்துகொள்ள முடியும். நம்பிக்கை, நாணயம் என்பவை அவரின் வியாபார இரகசியங்கள்".

பாடம்:-..........

பந்தி:-.......... வரிகள்:-.......... பக்கம்:-..........

06. "அது ஒரு குடியேற்றம் தமிழர்களும், சிங்களவர்களும் முஸ்லீம்களும் அங்கு வசிக்கிறார்கள்"

பாடம்:-..........

பந்தி:-.......... வரிகள்:-.......... பக்கம்:-..........

07. "முதலாளி உங்கட யோசனையும் நல்ல யோசனைதான்"

பாடம்:-..........

பந்தி:-.......... வரிகள்:-.......... பக்கம்:-..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08. "முதலில் தீப்பெட்டித் தொழிற்சாலையை ஆரம்பித்து ஏழைகளின் பசிப்பிணியைத் தீர்க்கச் சித்தமானார்"

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

09. "கார் வாங்க வேண்டுமென்ற பிள்ளைகளின் ஆசை மெல்ல மெல்லத் தணியலாயிற்று"

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

10. "கோலமுறவே புனைமாலை யார்க்கோ வெங்கள் குலக்கொழுந்தே!"

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

11. "கலி நளனைப் பற்றியதோடு நின்றுவிடவில்லை. புட்கரன் என்னும் சிற்றரசனோடு நளனைச் சூதாடச் செய்தான்"

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

12. "தனக்கு இரண்டாவது சுயம்வரம் நடைபெறவிருப்பதாக் கூறும் செய்தியை இருதுபன்னனுக்குத் தெரியப்படுத்தினாள்".

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

13. "கமலா தன் தகப்பனுடைய ஆலோசனையின்படி வெளிநாடுகளில் வாழும் தன் உறவினரைக் கொண்ட மின் அஞ்சல் குழுவொன்றை ஆரம்பித்தாள்"

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

14. "அவ்விசைப்பலகைக்குகந்த எழுத்து மென்பொருள்கள் பல நிறுவனங்களால் தயாரிக்கப்பட்டுள்ளன".

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

15. "மின் அஞ்சலுக்கு உதவியாக குரல் அஞ்சல் புழகத்கத்துக்கு வரத் தொடங்கிவிட்டது".

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................

16. "உலகிலுள்ள பெருந்தொகையான கணனி இணைப்புக்களை இணையம் இணைக்கின்றது".

பாடம்:-....................

பந்தி:-.................... வரிகள்:-.................... பக்கம்:-....................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. "வாழ்க்கையை அனுபவித்தல் என்பது ஒரு கடற்குளிப்புப் போன்றது"

பாடம்:-........................................................................................................

பந்தி:-.................................. வரிகள்:-.................................. பக்கம்:-..................................

18. "கவிஞர்கள் தங்கள் கற்பனைமூலம் இலட்சிய உலகத்தைச் சிருஷ்டிக்கின்றனர்".

பாடம்:-........................................................................................................

பந்தி:-.................................. வரிகள்:-.................................. பக்கம்:-..................................

19. "மேகமும் தன் பெருமையையும் வலிமையையும் இடிமுழக்கத்தால் அண்டம் அதிரச்செய்யும்"

பாடம்:-........................................................................................................

பந்தி:-.................................. வரிகள்:-.................................. பக்கம்:-..................................

20. "உனது விதி உன்னைச் சேருமுன்னர் நீ உனது கடமையைச் செய்"

பாடம்:-........................................................................................................

பந்தி:-.................................. வரிகள்:-.................................. பக்கம்:-..................................





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

I. S. B. N 955 - 98302 - 01

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org